வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu




Email : news@eelanadu.lk | மலர் : 01 | 05.08.2021 வியாழக்கிழமை | இதழ் : 244 | பக்கங்கள் : 16

## நாட்டில் டெல்டா பரவல் தீவிரம்! முடக்கத்துக்கு தயாராகும் அரசு!!

கொழும்பு, ஓக. 05

கொரோனா மற்றும் டெல்டா தொற்று தீவிரமாக பரவிவரும் நிலையில் எதிர் வரும் வார இறுதியில் பயணத் தடை அல்லது குறுகியகால முடக்கமொன்றை அமுல்படுத் துவது குறித்து அரசு ஆராய்ந்து வருகிறது.

எதிர்வரும் வெள்ளிக் கிழமை கொரோனா தடுப்பு செயலணியின் விசேட கூட்ட மொன்று நடைபெறவுள்ளது. இந்த கூட்டத்திற்கு விசேட மருத்துவ

15

## கொரோனா தீவிர நெருக்கடியினால் 2 வைத்தியசாலைகளில் அவசர நிலை

கொழும்பு, ஓக. 05

கோவிட் -19 தொற்று நோய் நெருக்கடியை அடுத்து காலி கராப்பிட்டிய வைத்தியசாலை யில் சுகாதார அவசர நிலை பிர கடனப்படுத்தப்பட்டுள்ளது.

வைத்தியசாலையில் தொற்று நோயாளர் தொகை அதிகரித்துள்ளதுடன், வைத் தியசாலை ஊழியர்கள் பலரும் தொற்றுக்குள்ளாகிப் பாதிக்கப் பட்டதை அடுத்தே நேற்று அங்கு அவசர நிலை அறிவிக் கப்பட்டது.

இது குறித்து கராபிட்டிய வைத்தியசாலை பதில் பணிப் பாளரால் வைத்தியசாலை ஊழியர்களுக்கு எழுத்து பூர்வமாக அறிவிக் கப்பட்டுள்ளதாக

15

## வடக்கில் 26 சிறுவர்களுக்கு நேற்று கொரோனா தொற்று

யாழ்ப்பாணம், ஓக. 05

வடக்கு மாகாணத்தில் சிறுவர்கள் தொற் றுக்கு இலக்காகும் நிலைமை அதிகரித்துள்ளது. இந்த நிலையில், நேற்று 26 சிறுவர்கள் தொற்றாளர்களாக அடையாளம் காணப்

15

## மேலும் 82 பேர் மரணம் 2,543 பேருக்கு தொற்று

கொழும்பு, ஆக. 05,

இலங்கையில் மேலும் 82 பேர் கொரானா வினால் மரணமாகினர். இந்த இறப்புக்களை சுகாதார சேவைகள் பணிப்பாளர் நேற்றிரவு உறுதி செய்துள்ளார்.

இதனையடுத்து இலங்கைக்குள் கொரோனாவினால் மரணமானோரின்

15

## மாகாணங்களுக்கு இடையே பயணிப்போருக்கு எச்சரிக்கை!

கொழும்பு, ஓக. 05

மாகாணங்களுக்கு இடையிலான போக்கு வரத்து மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளபோதிலும், அத்தியாவசிய காரணங்கள் அல்லாமல் வேறு காரணங்களுக்காக மாகாண எல்லைகளைக் கடக்கும் நபர்கள் திருப்பி

15

# பயணம், சேவைகளை பெற தடுப்பூசி அட்டை கட்டாயம்!

### யாழ். மாவட்ட அரச அதிபர் அறிவிப்பு

- 30 வயதுக்கு மேற்பட்டோருக்கு தடுப்பூசி கட்டாயம்
- ஆலயத்தின் உள்ளேயே திருவிழா நடத்த அனுமதி
- டெல்டா திரிபு பரவும் சாத்தியம்
- நடமாட முடியாதோருக்கு வீட்டிலேயே தடுப்பூசி

யாழ்ப்பாணம், ஆக. 04

**யாழ். மாவட்டத்தில் 30 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் தடுப்பூசி அட்டை வைத்திருப்பது கட்டாயம். மருத்துவமனைகள், சில அரச திணைக்களங்களில் சேவைகளைப் பெறவும், பொது இடங்கள், சிறப்பு அங்காடிகள், பொதுச் சந்தைகளுக்கு செல்லவும், பேருந்துகளில் பயணிக்கவும்கூட தடுப்பூசி அட்டை அவசியம்.**

**-இவ்வாறு தெரிவித்துள்ளார் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன்.**

யாழ். மாவட்டத்தில் தொற்று நிலைவரம் தொடர்பில் மாவட்ட செயலகத்தில் நேற்று அவர் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

**137 மரணம் 6,969 பேர் தனிமை!**

யாழ்ப்பாணத்தில் தொற்று நிலைமை சற்று தீவிரம் பெற்றுள்ளது. நேற்று (நேற்று முன்தினம்) செவ்வாய்க் கிழமை 75 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இன்று (நேற்று) வரை 137 கொரோனா இறப்புகள் பதிவாகியுள் ளன. 2 ஆயிரத்து 445 குடும்பங்களை சேர்ந்த 6 ஆயிரத்து 969 பெயர் யாழ்ப்பாண மாவட்டத்தில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். வேலணை, பருத்தித்துறை பிரதேசங்களிலேயே பலர்

15

## சிவில் பாதுகாப்பு படை வசமுள்ள பண்ணைகள் வடக்கு சபையிடம் எப்போது ஒப்படைக்கப்படும்?

### பாராளுமன்றில் சிறிதரன் எம்.பி. கேள்வி

கொழும்பு, ஓக. 05

“கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்டங்க ளில் உள்ள விவசாயப் பண்ணை களை சிவில் பாதுகாப்புப் படை யணியே பேணி வருகின்றது. இப்பண்ணைகள் எப்போது



வடக்கு மாகாண சபையிடம் ஒப்படைக்கப்படும்?”

- இவ்வாறு கேள்வி எழுப் பினார் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் யாழ்ப்பாணம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம்

15

## வடக்கில் விவசாய பண்ணைகள் படை வசம் இருப்பது உண்மையே

### சபையில் கூறினார் சமல் ராஜபக்ஷ

கொழும்பு, ஓக. 05

கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களில் பல விவசாய பண்ணைகளை சிவில் பாதுகாப்பு படையணி நடத்தி வருவது உண்மையே என அமைச்சர் சமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

நேற்று இடம்பெற்ற பாரா ளுமன்ற அமர்வின்போது உரை யாற்றிய அவர், நாட்டுக்கு தேவையான உணவுகளை உற் பத்தி செய்து

15

## நல்லூர் திருவிழா ஆலயத்தின் உள்ளேயே நடக்கும்!

யாழ்ப்பாணம், ஓக. 05

வரலாற்று பிரசித்தி பெற்ற நல்லூர் கந்தசுவாமி ஆலயத் தின் உட்பிரகாரத்திலேயே திரு விழா நடத்துவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு யாழ். மாவட்ட அரசாங்க

15

## வடக்கில் நேற்று 128 தொற்றாளர்!

யாழ்ப்பாணம், ஓக. 05

யாழ்ப்பாணத்தில் 84 பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் நேற்று 128 பேர் தொற் றாளர் களாக அடையாளம் காணப் பட்டனர்.

நேற்றையதினம் யாழ். போதனா மருத்துவமனை, யாழ். பல்கலைக்கழக ஆய்வு கூடங்களின்

15

### கொழும்பில் ஆசிரியர்கள் வாகன பேரணி

## ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 42 பேர் கைது

கொழும்பு, ஓக. 05

சம்பளம் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து அதிபர் மற்றும் ஆசிரியர் சங் கங்களின் பிரதிநிதிகள் வாகனப் பேரணி மூலம் கொழும்பில் நேற்று ஆர்ப்பாட் டத்தில் ஈடு பட்டனர்.

15

## சம்பள பிரச்னைகளுக்கு பட்ஜெட்டில் தீர்வு; பொறுப்புடன் நடக்கவேண்டும் ஆசிரியர்கள்

### சபையில் கல்வி அமைச்சர் பீரிஸ் கோரிக்கை

கொழும்பு, ஓக. 05

“ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டுப் பிரச்னைக்கு மாத்திரமன்றி அதற்கு சமாந்திரமாக அனைத்து அரச சேவையாளர்களின் சம்பள முரண்பாட்டு பிரச்னை களுக்கும் எதிர்வரும்

15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

# இப்படியும் நடக்கிறது...!

அவர் ஓர் அரசியல் கட்சியின் தலைவர். ஆயுத 'கழகமாக' இருந்து பின்னர் ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்த கட்சி ஒன்றின் தலைவர். கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றின் தலைவர்.

கொரோனா பரவல் காரணமாக முதலாவது முழு ஊரடங்குச் சட்டம் திடீரென பிறப்பிக்கப்பட்ட இரண்டொரு நாட்களில் - இன்னுமோர் 'இயக்க' கட்சியின் முக்கியஸ்தர் ஒருவரிடம் இருந்து அவருக்கு தொலைபேசி அழைப்பு ஒன்று வந்ததாம்.

அழைப்பு எடுத்தவர், தனது மிக நெருங்கிய உறவினர் ஒருவரின் மரணச்சடங்கில் கொழும்பில் கலந்துகொள்ள வேண்டிய நிலை வந்ததால், யாழ்ப்பாண பொலிஸ் அதிகாரியிடம் அனுமதி கடிதம் பெற்றுக்கொண்டு புறப்பட்டிருக்கிறார்.

முகமாலை மாவட்ட எல்லையில் அவரை மறித்த இராணுவத்தினர், அதற்கு அப்பால் செல்ல அனுமதியளிக்க வில்லை. பொலிஸ் அனுமதி கடிதத்தை இவர் காட்டியிருக்கிறார்.

"பொலிஸ் அதிகாரி தன்னுடைய கடமையைச் செய்திருக்கிறார் நான் எனக்கு தரப்பட்ட கடமையைச் செய்கின்றேன். எனது மேலதிகாரியிடம் இருந்து எனக்கு உத்தரவு கிடைத்தால் தான் நான் உங்களை மேலும் செல்ல அனுமதிக்கலாம்" என்று கூறியிருக்கிறார் கடமையிலிருந்த அந்த கீழ்நிலை படை அதிகாரி.

இந்த நிலையில்தான், திரும்பி யாழ்ப்பாணம் வந்த அந்த 'இயக்க' கட்சியின் முக்கியஸ்த்தர், இந்த பங்காளிக் கட்சித் தலைவருக்கு அழைப்பை எடுத்து விடயத்தை விளக்கிய பின்பு -

"அண்ணே உங்களுக்கு கோட்டாபயவுடன் தொடர்பு இருக்கும்தானே. ஒருக்கால் அவரிடம் கதைத்து நான் கொழும்புக்கு போக அனுமதி எடுக்கலாமோ?", என்றிருக்கிறார்.

இத்தனைக்கும் - கேட்டவரின் கட்சி ஒன்றும் பாதுகாப்பு துறையுடன் தொடர்பில் இல்லாத கட்சியும் அல்ல. அது மட்டும் அல்ல, இதனைக் கேட்டவரே முன்னர் ஒரு காலத்தில் பாதுகாப்பு தரப்புடன் நெருக்கமாக இயங்கிய வேறு ஓர் இயக்கத்திலிருந்துதான் அரசியலுக்கே வந்தவர்.

இவரின் கோரிக்கையைக் கேட்ட அந்த தலைவர், தனக்கே உரிய பாணியில், நிதானமாக சொன்னாராம் - "நானும் ஒருக்கால் கொழும்புக்கு அவசரமாக போகவேணும் தம்பி. கோட்டாபயவின் தொடர்பு உங்களுக்கு கிடைச்சால் எனக்கும் ஒருக்கால் அதை தாடாப்பா" என்று.

நம்மட இந்த பங்காளித் தலைவரை - யுத்த காலத்தில் ஆட்லறி ஷெல் வெடிக்கிற சத்தமே கேட்காத தூரத்தில் இருந்துவிட்டு, யுத்தம் முடிந்த பின்பு அரசியலுக்கு வந்த ஒரு தமிழ் அரசுக் தலைவர், ஏதாவது வம்புக் கதைகள் சொல்லி அடிக்கடி சீண்டுவது வழக்கமாம்.

கூட்டமைப்பு வழியாக அரசியலுக்கு வந்து, பின்னர் குத்துக்கரணமடித்து அமைச்சரும் ஆகிவிட்ட ஓர் அரசியல் வாதியின் வீட்டு வாசலில் அவரின் மெய்க்காவலர் இன்னொருவரை சுட்டுக்கொன்ற அண்மைய சம்பவத்தின் பின்னர் -

நமது பங்காளித் தலைவரை பாராளுமன்றத்தில் கண்ட அந்த தமிழ் அரசுத் தலைவர், பக்கத்தில் தனது புதிய கிழக்கு சகாவையும் வைத்துக்கொண்டு - திரும்பவும் ஒரு சீண்டல் கதையை கிண்டலாகச் சொல்லியிருக்கிறார். "என்ன அண்ணர், உங்களை விட்டிட்டு போன ஆள் திரும்பி உங்களிட்டையே வந்திட்டார் போல இருக்கே. வேலையைக் காட்டியிருக்கறார்", என்றாராம்.

நம்மட பங்காளித் தலைவர் அவர்களைப் பார்த்து ஆறுதலாகச் சொன்னாராம் - "நாங்கள் செய்திருந்தால்தான், ஆர் செய்ததெண்டே வெளியில தெரிய வராமல் இருக்க பக்கத்தில நிண்ட சாட்சியையும் சேர்த்தல்லோ செய்திருப்பம்", என்று. பதிலைக் கேட்டு வாயடைத்துப் போன அந்த தமிழ் அரசுத் தலைவர் பெரிதாகச் சிரித்து சமாளித்தாராம்.

ஆயுதப் போராட்ட காலம் முழுவதுமே, சங்கடமான அரசியல் முடிவுகளை எடுக்க வேண்டிய, நெருக்கடியான சூழ்நிலைகளுக்குள் சிக்குப்படாமல் தப்பித்துக்கொண்டவர்களும், வெடிமருந்து வாசனையும் இரத்த வாடையும் தெரியாத தூரத்தில் பாதுகாப்பாக வாழ்ந்தவர்களும் - அவ்வாறான சிக்கலான சூழ்நிலைகளுக்கு ஊடாக வாழ்ந்து முடித்து வந்திருப்பவர்களுடன் இப்போது நடந்துகொள்ளும் விதங்களைப் பார்த்தால் சிரிப்புத்தான் வருகின்றது.

இத்தகைய திடீர் தமிழினப் பற்றாளர்களும், தங்களை 'இருபத்திநான்கு கரட்' தமிழ்த் தேசியத் தங்கங்கள் என்று கூறிக்கொண்டிருப்பவர்களும் - தத்தமது தனிப்பட்ட தேவைகளுக்காகப் பாதுகாப்புத் தரப்பின் படிகளில் தாம் ஏறி இறங்குவதையும், கொழும்பு ஆட்சியாளர்களுடன் தாம் பேணிவரும் பின்கதவு உறவுகளையும் மறைப்பதற்காகவே தம்மைத் தூய்மையானவர்களாக காட்டிவருகின்றார்கள் என்பதைத் தெரிந்தவர்களும் நம்மிடையே உண்டு.!

**- ஊர்க்குருவி**

# வசந்த கரன்னகொடவுக்கு எதிராக குற்றச்சாட்டுகளை தொடரமுடியாது

**சட்டமா அதிபர் திணைக்களம் அறிவிப்பு**

கொழும்பு, ஓக. 05

2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் 11 இளைஞர்கள் கடத்தப்பட்ட வழக்கில் முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னகொடவுக்கு எதிராக குற்றச்சாட்டுகளை தொடர முடியாது என சட் டமா அதிபர் திணைக்களம் அறிவித்துள்ளது.

இளைஞர்களைக் கடத்தி காணாமல் ஆக்கியமை, அவர்களைக் கொலை செய்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளில் முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னகொட உள்ளிட்ட பிரதிவாதிகள் 14 பேருக்கு எதிராக சட்ட மா அதிபரினால் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்ட குறித்த குற்றப் பத்திரிகையை இரத்து செய்யக்கோரி முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னகொட எழுத்தானை மனு தாக்கல் செய்திருந்தார்.

குறித்த மனு கொழும்பு மேல் நீதிமன்ற அமர்வில் விசாரணைக்கு வந்தபோதே கரன்னகொட மீது குற்றச்சாட்டுகளை தொடர முடியாது என சட்டமா அதிபர் திணைக்களம் சார்பாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## வடமராட்சி விபத்தில் இளைஞர் படுகாயம்!

வடமராட்சி, ஓக. 05

மோட்டார் சைக்கிளும் காரும் மோதிய விபத்தில் மோட்டார் சைக்கிளை செலுத்தி வந்த இளைஞர் படுகாயம் அடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டுள்ளார்.

இந்த விபத்து நேற்றுமுன் தினம் செவ் வாய்க்கிழமை மதியம் மந்திகை - சாவகச்சேரி வீதி ஆஸ்பத்திரி வீதிச்சந்தியில் இடம் பெற்றுள் ளது.

இதில், கரணவாய் வடக்கு நவிண்டி லைச் சேர்ந்த கனகலிங்கம் திலீபன் (வயது- 34) என்பவரே படுகாயங்களுக்கு உள்ளானார்.

விபத்துத் தொடர்பில் பருத்தித்துறைப் பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (ஐ-02)

## குளவிக்கொட்டுக்கு இலக்காகி நால்வர் வைத்தியசாலையில்

ஹட்டன், ஓக. 05

ஹட்டன், வனராஜா சமர்வில் கீழ்ப் பிரிவில், நால்வர் குளவிக்கொட்டுக்கு இலக்கான நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

தோட்ட வெளிக்கள உத்தியோகத்தர் உள்ளிட்ட இரண்டு ஆண்களும், இரண்டு பெண் தொழிலாளர்களுமாக நால்வரே குளவிக்கொட்டுக்கு இலக்காகியுள்ளனர்.

குளவிக்கொட்டுக்கு இலக்காகிய வெளிக்கள உத்தியோகத்தர் உட்பட இரு ஆண்களும் டிக்கோயா வைத்தியசாலையில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருவதுடன் ஏனைய இரண்டு பெண்களும் சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளனர் என்று வைத்தியசாலை அதிகாரிகள் தெரிவித்தனர். (இ)

## கல்வி TV CHANNEL-1

**05.08.2021**
**வியாழக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | விஞ்ஞானம் |
| 06.00 | தரம்-07 | கணிதம் |
| 06.45 | தரம்-08 | தமிழ் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | சங்கீதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | வரலாறு |
| 05.00 | A/Lவினாத்தாள் | சைவசமயம் கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| | மறு ஒளிபரப்பு | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | சங்கீதம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் |
| 04.30 | தரம்-10 | தமிழ் |

## கல்வி TV CHANNEL - 2

**05.08.2021**
**வியாழக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | கதை |
| 09.00 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-03 | சைவசமயம் |
| 10.30 | தரம்-03 | அழகியல் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | கணிதம் - paper |
| 01.15 | தரம்-05 | சைவசமயம் |
| 02.00 | தரம்-05 | Gentral knowledge |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 06.00 | தரம்-03 | சைவசமயம் |
| 06.45 | தரம்-03 | அழகியல் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | கணிதம் - paper |
| 09.00 | தரம்-05 | சைவசமயம் |
| 09.45 | தரம்-05 | Gentral knowledge |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சைவசமயம் |
| 12.30 | தரம்-03 | அழகியல் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | கணிதம் - paper |
| 02.45 | தரம்-05 | சைவசமயம் |
| 03.30 | தரம்-05 | Gentral knowledge |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு
Eelanadu
05.08.2021 வியாழக்கிழமை
பிலவ வருடம், ஆடி 20

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம் உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

# அடம்பன் கொடி அரசியல்?

சீனர்களை நம்பும் அரசாங்கம் தமிழர்களையும் முஸ்லிம்களையும் நம்பவில்லை என்று தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவர் விக்னேஸ்வரன் தெரிவித்திருக்கின்றார். அவரின் கூற்றில் தவறில்லை. விக்னேஸ்வரன் கூறுவது போன்றுதான் அரசாங்கத்தின் செயல்பாடுகள் அமைந்திருக்கின்றன. சிங்கள ஆளும் தரப்புகள் தொடர்பில் சிந்திப்பதால் அல்லது அவர்களை நோக்கி விமர்சனங்களை முன்வைப்பதால் தமிழர்களுக்கு ஏதாவது நன்மை இருக்கின்றதா?

இப்படியான விமர்சனங்களை சிங்கள ஆளும் தரப்புகள் செவிமடுக்குமாக இருந்தால் நிலைமைகள் எப்போதோ மாற்றமடைந்திருக்கும். இலங்கை தமிழ் அரசு கட்சி உருவாக்கப்பட்ட 1949இலிருந்து, இவ்வாறான விமர்சனங்களையும் குற்றச்சாட்டுக்களையும் முன்வைத்து வந்திருக்கின்றனர். என்ன முன்னேற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன? இதுவரை ஏற்படாத முன்னேற்றங்களா இனிமேல் ஏற்படும்? அதிலும் தன்னை ஒரு சிங்கள - பௌத்த தலைவனாக பிரகடனம் செய்திருக்கும் ஜனாதிபதி கோட்டாபயவின் தலைமையில் இருக்கும் பொதுஜன பெரமுன அரசாங்கத்திடம் மாற்றங்களை எதிர்பார்க்க முடியுமா?

எனவே, ஆட்சியாளர்களை நோக்கி நேரத்தை செலவிடுவதற்குப் பதிலாக, தமிழ் தலைமைகள் தங்களை நோக்கியே, தங்களின் நேரத்தை செலவிட வேண்டும். இன்று தமிழ் மக்களுக்கு தேவையானது அடம் பன் கொடி அரசியலாகும். அது என்ன அடம்பன் கொடி அரசியல்? அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு என்று ஒரு கூற்றுண்டு. இதனை கிராமங்களில் வாழும் முதியவர்கள் சாதாரணமாக பயன்படுத்துவார்கள். அதாவது, அடம்பன் கொடி மிகவும் பலவீனமான ஒன்று. எளிதில் அறுத்துவிடலாம். ஆனால், அவ்வாறான பல கொடிகளை ஒன்றாக இணைத்தால் அது ஒரு பலமாகும். அதன் பின்னர் அதனை எளிதில் அறுக்க முடியாது. அது போன்றுதான் நமது அரசியல் செயல்பாடுகளும். நாம் சில விடயங்களில் ஒன்றாக நின்றால், அதன் பின்னர் நம்மை மற்றவர்கள் எளிதில் வீழ்த்திவிட முடியாது. இன்றைய நிலையில் தமிழர்களிடம் எஞ்சியிருப்பது அவர்களின் ஜனநாயக பிரதிநிதித்துவ பலம் ஒன்றுதான். அதனை முடிந்தளவிற்கு ஒன்றுதிரட்டி பலமானதாக்கிக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் இன்றைய அரசாங்கத்தின் தந்திரோபாய நகர்வுகளை தமிழர்களால் ஒருபோதும் எதிர்கொள்ள முடியாது.

விக்னேஸ்வரன் போன்றவர்கள் தன்னால் முடிந்த வரையில் இதற்காக அர்ப்பணிப்புடன் பாடுபட வேண்டும். சம்பந்தனை நோக்கி செல்ல வேண்டும். அதில் தவறு ஒன்றுமில்லை. விக்னேஸ்வரன் போன்ற ஒருவர் அரசியலுக்கு தேவை என்று எண்ணிய போது, விக்னேஸ்வரனின் வாசலுக்கு செல்வதற்கு சம்பந்தன் சற்றும் தயங்கவில்லை. மாவை சேனாதிராசா தயங்கவில்லை. பங்காளிக் கட்சிகளின் தலைவர்களான சித்தார்த்தன், சுரேஷ் பிறேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன் தயங்கவில்லை. அரசியல் ரீதியில் சம்பந்தன் எவராலும் நிராகரிக்க முடியாத இடத்தில் இருந்த ஒருவர். இராஜதந்திர சமூகத்தின் மத்தியில் அவருக்கு இருந்த மதிப்பு வேறு எவருக்கும் இருந்திருக்கவில்லை. அந்த நிலையிலும் விக்னேஸ்வரனின் வீடு தேடிச் சென்றார். இன்று ஒரு பொது வேலைத் திட்டத்திற்காக விக்னேஸ்வரன், கூட்டமைப்பை நோக்கி, சம்பந்தனை நோக்கி செல்வதில் எந்தவொரு தவறும் இல்லை. இதில் தன்முனைப்பிற்கு இடமில்லை ஏனெனில், இது எவரினதும் தனிப்பட்ட விடயமல்ல. இது மக்களின் அரசியல் இருப்பு, எதிர்காலம் தொடர்பானது.

அரசியலும் விமர்சனங்களும் ஒட்டிப்பிறந்தவை. விமர்சனங்களே ஜனநாயக அரசியலை செதுக்கி புதுப்பிக்கும். இந்த அடிப்படையில் நோக்கினால் அரசியல் ரீதியில் முன்வைக்கப்படும் விமர்சனங்கள் அனைத்தையும் நட்புடனும் பொறுப்புடனுமே அனைவரும் நோக்க வேண்டும். எவர் மீதுமுள்ள தனிப்பட்ட கோபதாபங்களின் விளைவாக விமர்சனங்களை நோக்கக்கூடாது. எனவே, கடந்த கால முரண்பாடுகளை புறம்தள்ளி ஆரோக்கியமான அரசியல் உரையாடல் ஒன்றை நோக்கி அனைவரும் அணிதிரள வேண்டும். ஏனெனில், நிலைமைகள் வேகமாக மாறிக் கொண்டிருக்கின்றன. தமிழரின் அரசியல் எதிர்காலம் மோசமாக பலவீனமடைந்து செல்கின்றது.

# ஆங்கிலேயரை நம்பி தமிழ், சிங்கள மொழிகளை புறக்கணித்த காலமும் உண்டு!

**அலசுவது இராஜதந்திரி**

*இலங்கையின் சிங்கள ஆட்சியாளர்கள் சீனாவையும், சீனர்களையும் நம்புமளவுக்கு தமிழர், முஸ்லிம்களை நம்பவில்லை என்று முன்னாள் வட மாகாண சபை முதலமைச்சரும் , தற்போதைய பாராளுமன்ற உறுப்பினருமான சி. வி. விக்னேஸ்வரன் தமது ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளார். பாராளுமன்ற உறுப்பினர் சி. வி. விக்னேஸ்வரன் கூறியிருப்பது பெரிதும் ஏற்றுக்கொள்ளப் படக்கூடியதே.*

*இருந்தபோதிலும் இலங்கையில் முற்றுமுழுதான ஆங்கில மொழி மோகத்தினதும், ஆங்கிலமயமான கல்வி, நடை, உடை, பாவனை என்பவற்றின் இறுதிச் சந்ததியைச் சேர்ந்தவராகவே பாராளுமன்ற உறுப்பினர் சி. வி. விக்னேஸ்வரன் விளங்குகின்றார். இருந்த போதிலும், ஆங்கிலத்தின் செல்வாக்கு இலங்கையில் இன்றுவரை இருந்து வருகின்ற நிலையில் சீனாவை இலங்கையின் ஆட்சியாளர்கள் நம்புமளவுக்கு இலங்கையின் சிறுபான்மையினரான தமிழர்களையும் முஸ்லிம்களையும் நம்பவில்லை என்று விக்னேஸ்வரன் குறிப்பிட்டுள்ளார்.*

**சீன காலனித்துவம்**

*சி. வி. விக்னேஸ்வரன் குறிப்பிட்டுள்ளதை நோக்கும்போது இலங்கையில் இரு நூறு ஆண்டுகளுக்கு முன்னர் நிலவிய மேற்கத்தேய காலனித்துவ ஆட்சிமுறையிலிருந்தும் வேறுபட்டதாக தற்போது சீனாவின் பொருளாதார வல்லமையுடன் கூடிய நவ காலனித்துவ முறை கிழக்கேயிருந்து உருப்பெற்று இலங்கையை படிப்படியாக ஆட்கொண்டு வருவதையே அறிந்து கொள்ளக்கூடியதாக இருக்கின்றது.*

*1815ஆம் ஆண்டு இலங்கை ஆங்கிலேயரின் காலனித்துவ ஆட்சியின் கீழ் வந்திருந்தது. இதனையடுத்து எங்கும் எதிலும் ஆங்கிலமயமான தன்மையே நிலைபெறத் தொடங்கியது. ஆட்சி அதிகாரம், நிர்வாக விடயங்கள், கல்வி, பொருளாதாரம், வாழ்க்கை முறை, நடை, உடை பாவனை அனைத்திலுமே ஆங்கிலேய செல்வாக்கு செறிந்திருந்தது. அண்மைக்காலம் வரை சி. வி. விக்னேஸ்வரன் கூட ஆங்கில நடை, உடை பாவனைக்கு உட்பட்டவராகவே இருந்ததோடு இலங்கையில் இன்றுவரை ஆங்கிலம் ஏதோ ஒரு வடிவில் செல்வாக்குச் செலுத்தி வருகின்றது.*

*இன்றைய சந்ததியினரை எடுத்துக்கொள்ளும் பட்சத்தில் தலைநகர் கொழும்பில் மாத்திரமே ஆங்கிலத்தின் செல்வாக்கு ஓரளவு நிலை பெற்றுள்ளதை அவதானிக்க முடிகின்றது.*

**தமிழரின் ஆங்கில செல்வாக்கு**

*இலங்கையில் ஆங்கில மோகம் செல்வாக்குச் செலுத்திய காலத்தில் சிங்களவரை புறந்தள்ளுமளவுக்கு தமிழர்கள் ஆங்கிலத்தில் மேம்பட்டிருந்தனர். தென்னிலங்கையில் ஆங்கில மொழியைக் கற்பிக்குமளவுக்குக்கூட தமிழர்கள் ஆங்கிலத்தில் மேலோங்கியிருந்தனர்.*

*இதேவேளை, இலங்கையில் ஆங்கிலேயரிடமிருந்து சுதந்திரம் பெறுவதற்கு முன்னின்று உழைத்தவர்கள்கூட தமிழர்களே என்பது குறிப்பிடத்தக்கது. ஏனெனில், ஆங்கிலத்திலும் கல்வி மற்றும் சமூக அந்தஸ்து என்பவற்றில் ஆங்கிலேயர்களால் கணிக்கப்படக் கூடியவர்களாக தமிழர்கள் காணப்பட்டிருந்தனர்.*

*இருந்தபோதிலும், தமது தேசப்பற்றை முன்னிறுத்தியவர்களாக ஆங்கிலேய காலனித்துவ ஆட்சியில் செல்வாக்குப் பெற்றிருந்த தமிழர்கள் இலங்கையின் சுதந்திரத்துக்காகப் போராடி வெற்றிபெற்றிருந்தனர்.*

*ஆனால், தற்சமயம் இலங்கை ஆங்கிலேயரிடமிருந்து சுதந்திரமடைந்து எழுபது ஆண்டுகளின் பின்னர் பொருளாதார ரீதியாக ஒரு நவ காலனித்துவ செல்வாக்கிற்குட்பட்ட நிலையே காணப்படுகின்றது. இதனையே பாராளுமன்ற உறுப்பினர் சி. வி. விக்னேஸ்வரன் சுட்டிக்காட்டியுள்ளதோடு சிங்கள ஆட்சியாளர்கள் சீனாவை நம்புமளவுக்கு இலங்கையில் சிறுபான்மையினரான தமிழ், சிங்கள மக்களை நம்பவில்லை என்று தெரிவித்துள்ளார்.*

**நம்பி ஏமாந்த தமிழர், முஸ்லிம்கள்**

*சிங்கள ஆட்சியாளர்கள் இலங்கையில் தற்சமயம் நிலவுகின்ற சீன செல்வாக்கு காரணமாக மட்டுமல்ல. எப்போதுமே சிறுபான்மையினரான தமிழர்களையும், முஸ்லிம்களையும் தமது அரசியல் இலாபங்களுக்காக சிங்களவர்கள் நம்பியிருந்தனரே தவிர, எவ்வகையிலும் இன ஐக்கியத்தை பேணும் விதத்தில் நம்பியிருக்கவில்லை. ஆனால், தமிழர்களும், முஸ்லிம்களும் பெரும்பான்மை சிங்களவர்களை காலத்துக்குக்காலம் நம்பி மோசம் போனதே வரலாறு.*

*இந்த நிலையில் இலங்கை தற்போது பிராந்திய அரசியல் கெடுபிடிக்குள்ளாகி சீனாவின் கடனாளியாகவும் மாறியுள்ள நிலையில் சி. வி. விக்னேஸ்வரன்கூறியிருக்கின்றமை போல இலங்கையின் ஆட்சியாளர்கள் சிறுபான்மையினரான தமிழர்களையும், முஸ்லிம்களையும் மட்டுமல்ல. பெரும்பான்மை சிங்கள மக்களையும் சீன வல்லாதிக்கத்துக்கு அடைமானம் வைத்த நிலையே காணப்படுகின்றது.*

*சீனாவை நம்புமளவுக்கு சிங்கள ஆட்சியாளர்கள் தமிழர்கள் , முஸ்லிம்களை நம்பவில்லை என்று சி வி. விக்னேஸ்வரன் கூறியிருந்தார். ஆனால், விரும்பியோ, விரும்பாமலோ ஒரு வேதாளத்தின் பிடியில் அகப்பட்டதுபோல முழு இலங்கையுமே சீனாவை முற்று முழுதாக நம்பியிருக்குமளவிற்கு ‘கடன் பட்டார் நெஞ்சம்போல’ சீனாவுடன் இலங்கை தனது உறவைப் பேணிவருகின்றது.* •

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**

முன்வினைப் பாவம் தீர நற்செயல்கள் செய்வீர்கள். குழந்தைகளின் முயற்சி பலிக்கும். உடல் நிலை மேம்படும். மற்றவர்களுடன் அனுசரித்துச் செல்வது நன்மையளிக்கும்.

**இடபம்**

நண்பர்களிடம் எச்சரிக்கை தேவை. சமூக மதிப்பு கூடும். யோசனையுடன் செயல்பட்டு வெற்றியை நோக்கிச் செல்வீர்கள். கண்ணியமாக செயல்பட்டு நல்லவர்களின் ஆதரவைப் பெறுவீர்கள்.

**மிதுனம்**

மனதில் இருந்த கவலை தீரும். நண்பர்களால் உதவி உண்டு. அலைச்சல், வீண் செலவுகள் இருக்கும். குடும்பத்தில் டென்ஷன் வரும். வீண் பயம் நீங்கும். போராடி வாழ்வில் நன்மை காண்பீர்கள்.

**கடகம்**

வலிய வரும் பிரச்னைக்கு உடனுக்குடன் தீர்வு காண்பீர்கள். மனதில் மகிழ்ச்சி நிலவும். விட்டு கொடுத்து நற்பெயர் பெறுவீர்கள். நற்செயல்கள் காரணமாக மதிப்பும், மரியாதையும் கூடும்.

**சிம்மம்**

சக பணியாளருக்கு உதவுவீர்கள். வயதானோருக்கு நன்மை கிடைக்கும். இளைஞர்கள் நன்மையடைவர். முயற்சி ஒன்று வெல்லும். முன் னேறிச் செல்வதற்கான முயற்சிகளில் மனம் தீவிரமாக ஈடுபடும்.

**கன்னி**

மற்றவர்களைக் குழப்பாமல் இருப்பது நல்லது. தீய செயல் செய்யும் நண்பர்க ளிடம் இருந்து முழுமையாக விலகுவீர்கள். பேச்சிலும் செயலிலும் முழுமையான நிதானத்தைக் கடைப்பிடியுங்கள்.

**துலாம்**

ஆணவப் போக்கால் தொல்லைக்கு ஆளாகலாம் கவனம். வெற்றி வாய்ப்பை பெற புதுவித முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். உடல் நலம் சீராகும். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும்.

**விருட்சிகம்**

வயதிலும் அனுபவத்திலும் சிறந்தவர்களால் பாராட்டப்படுவீர்கள். மற்றவர்களைக் கேலியாகப் பேசிக் கோபத்துக்கு ஆளாகாதீர்கள். அவசர முடிவுகளைத் தவிர்ப்பீர்கள்.

**தனுசு**

நல்ல வாய்ப்புகள் தேடி வரும். வழக்கத்தை விட வருமானம் கூடும். உங்கள் செயல்பாட்டுக்கான நற்பெயரும் பாராட்டும் கிடைக்கும். நினைத்ததை நடத்தி முடிக்க அனுபவம் கைகொடுக்கும்.

**மகரம்**

எத்தனைபேர் உங்கள் மேல் அன்பு வைத்திருக்கிறார்கள் என்று புரியும். விலை உயர்ந்த பொருட்களை வாங்க முயற்சி செய்வீர்கள். அக்கம்பக்கம் இருப்பவர்களிடம் அனுசரித்துப் போவது நலம்.

**கும்பம்**

விடாமுயற்சியால் வெற்றி இலக்கை நோக்கிச் செல்வீர்கள். நாவடக்கம் காரணமாக சிரமத்தில் சிக்காமல் நிம்மதியடைவீர்கள். மதிப்பிற்குரிய பெரியமனிதரின் அன்பும், ஆதரவும் கிடைக்கும்.

**மீனம்**

நல்லவர்களின் வழிகாட்டுதலை ஏற்றால் சிரமம் குறையும். நியாயமான கருத்துக் உரக்கச் சொல்வீர்கள். சேமிக்கலாம் கவனம். குடும்பத்தில் ஒருவர் உயர்நிலை எட்டுவதால் மகிழ்ச்சியடைவீர்கள்.

# தமிழக மீனவர்கள் மீதான தாக்குதலை தடுக்க உடன் நடவடிக்கை எடுங்கள்!

## வெளியுறவு துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு ஸ்டாலின் கடிதம்

சென்னை, ஓக. 05

தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படை தாக்குதல் நடத்துவதை நிறுத்த உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு தமிழக முதலமைச்சர் ஸ்டாலின் கடிதம் எழுதி உள்ளார்.



வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு முதலமைச்சர் ஸ்டாலின் எழுதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது

“தமிழக மீனவர்கள் மீதான தாக்குதலை தடுத்து விட வேண்டும். சர்வதேச சட்டங்களை பின்பற்றாமல் இலங்கைப் படையினர் மீனவர்களை தாக்குவது கண்டனத்திற்குரியது. நம் நாட்டு மீனவர்களின் உயிரையும் உடமைகளையும் பாதுகாக்க வேண்டிய வேண்டியது நமது கடமை. பல்லாயிரக்கணக்கான மீனவர்களின் வாழ்வாதாரத்தை பாதிக்கும் இந்த பிரச்னைக்கு நீடித்த அரசியல் தீர்வை காண வேண்டும். மேலும், இலங்கை கடற்படை சர்வதேச சட்டங்களை கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும். பிரச்சினைக்கு தீர்வு காண இலங்கை அரசுக்கு மத்திய அரசும் அழுத்தம் கொடுக்க வேண்டும்” என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த சில நாட்களுக்கு முன்னர் நாகை மீனவர் மீது இலங்கை கடற்படை துப்பாக்கிச்சூடு நடத்திய சம்பவத்தை சுட்டிக்காட்டி வெளியுறவுத் துறை அமைச்சருக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இந்த கடிதத்தை எழுதியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கோவில்களில் தமிழில் அர்ச்சனை; அறிவிப்பை வெளியிட்ட முதல்வர்

சென்னை, ஓக. 05

கோயில்களில் தமிழில் அர்ச்சனை நடைபெறும் என்று இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் சேகர்பாபு அறிவித்திருந்த நிலையில் இதுதொடர்பான அறிவிப்புப் பலகையை முதல்வர் ஸ்டாலின் நேற்று வெளியிட்டார்.




தமிழகத்தில் உள்ள கோயில்களில் தமிழ் மொழியில் அர்ச்சனை நடைபெற வேண்டும் என்பது பலரது விருப்பமாகவும் கோரிக்கையாகவும் இருந்து வருகிறது. தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு மூன்று மாதங்களுக்கு மேல் ஆகியுள்ள நிலையில் முதல்வர் ஸ்டாலின் தலைமையிலான தி.மு.க. அரசு பல்வேறு முக்கிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

இந்து சமய அறநிலையத் துறை அமைச்சராகப் பொறுப்பேற்ற சேகர்பாபு கோயில் நிலங்களை மீட்பது, கோயில்களில் ஆய்வு மேற்கொள்வது உள்ளிட்ட பணிகளில் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறார். இந்த நிலையில் தமிழகத்தில் உள்ள கோயில்களில் தமிழில் அர்ச்சனை செய்யப்படும் என்று கடந்த வாரம் அறிவித்திருந்தார்.

‘அன்னைத் தமிழில் அர்ச்சனை’ என்று தொடங்கப்படும் இந்தத் திட்டத்தில் முதற்கட்டமாக 47 கோயில்களில் தமிழ் மொழியில் அர்ச்சனை தொடங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. முதற்கட்டமாக இந்தத் திட்டம் நாளை, வெள்ளிக்கிழமை மயிலாப்பூரில் உள்ள கபாலீஸ்வரர் கோயிலில் தொடங்கி வைக்கப்பட உள்ளது. இதைத் தொடர்ந்து தமிழகம் முழுவதும் உள்ள 47 திருக்கோயில்களில் இந்த நடைமுறை செயல்படுத்தப்பட உள்ளது. இதற்கான அறிவிப்புப் பலகையை முதல்வர் நேற்று வெளியிட்டார்.

திருக்கோயில்களில் அன்னைத் தமிழில் அர்ச்சனை என்ற அறிவிப்புப் பலகை வைக்கப்பட்டு அதில் அர்ச்சகர்களின் பெயர், கைபேசி எண் ஆகியவை பக்தர்களுக்குத் தெரிவிக்கப்படும் வகையில் குறிப்பிடப்படும் என்று அமைச்சர் சேகர் பாபு தெரிவித்துள்ளார். தமிழகத்தில் உள்ள கோயில்களில் தமிழில் அர்ச்சனை தொடங்கப்படும் என்று அறிவிப்புக்குப் பலரும் பாராட்டு தெரிவித்து வருகின்றனர்.

# கிழக்கிந்திய கம்பனி போல பா.ஜ.க. வடக்கிந்திய கம்பனியாக உள்ளது

## கமல்ஹாசன் குற்றச்சாட்டு




கோவை, ஓக. 05

“தோல்வியை சினிமாவிலும் கற்றிருக்கிறேன். கோவை மக்கள் எங்களுக்கு நம்பிக்கையை அளித்துள்ளார்கள். தேர்தலின்போது கொடுத்த வாக்குறுதிகளை ஏமாற்றுவது தமிழகத்தில் உள்ள கட்சிகளுக்கு புதிதல்ல. மேகதாது விஷயத்தில் பா.ஜ.க இரட்டை வேடம் போடுகிறது என மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல்ஹாசன் தெரிவித்துள்ளார்.

கோவையில் கமல்ஹாசன் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

கிழக்கிந்திய கம்பனி போல, வடக்கில் பா.ஜ.க. எனும் வடக்கிந்திய கம்பனி தயாராகி வருகிறது. மேகதாது விஷயத்தில் பா.ஜ.க இரட்டை வேடம்போடுகிறது. கொரோனா நடவடிக்கையில் ஆளுங்கட்சி முடிந்ததை செய்கிறது. இன்னும் அதிகமாக, தீவிரமாக செயல்பட வேண்டும்.

தோல்வியை சினிமாவிலும் கற்றிருக்கிறேன். கோவை மக்கள் எங்களுக்கு நம்பிக்கையை அளித்துள்ளார்கள். இழந்த அரசியல் மாண்பை மீட்டெடுப்பது எங்கள் பணி. தேர்தலின்போது கொடுத்த வாக்குறுதிகளை ஏமாற்றுவது தமிழகத்தில் உள்ள கட்சிகளுக்கு புதிதல்ல. பென்னிகுயிக் சிலையை இடமாற்றுவதை அரசு கைவிட வேண்டும் என கூறினார்.

## வவுனியா வைத்தியசாலையிலும் ஒட்சிசன் தேவைப்பாடு அதிகரிப்பு

வவுனியா, ஓக. 05

கொரோனாத் தொற்றாளர்கள் மீண்டும் அதிகரித்துச் செல்லும்நிலையில்வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையிலும் ஒட்சிசன் தேவைப்பாடும் நோயாளர்களது எண்ணிக்கையும் அதிகரித்துச் செல்வதாக வைத்தியசாலைப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் நடைமுறையில் உள்ள பார்வையாளர்களுக்கான கட்டுப்பாடுகள் மற்றும் கொரோனா தடுப்பூசிகளுக்கு மக்கள் வெளிப்படுத்தியுள்ள ஆதரவுக்கு நன்றியை தெரிவிப்பதுடன், தடுப்பூசியை பெற்று கொள்ள அனைவரும் முன்வர வேண்டுமென வைத்தியசாலைப் பணிப்பாளர் கேட்டுக்கொண்டார்.

இது தொடர்பில் அவர் கருத்து தெரிவிக்கையில்-

மீண்டும் கொரோனா நோய் தாக்கம் நாடளாவிய ரீதியில் அதிகரித்து வருவதுடன் ஒட்சிசன் தேவையான நோயாளிகளும் அதிகரித்துச் செல்கின்றனர்.

வவுனியா மாவட்டத்திலும் நோயாளர் எண்ணிக்கை அதிகரித்து செல்வதுடன் மாவட்ட பொது வைத்தியசாலையின் ஒட்சிசன் பாவனையளவும் பாரிய அளவில் அதிகரித்துள்ளது.

மாவட்ட மக்கள் தடுப்பூசியை பெற்றுக்கொள்வதோடு மட்டுமல்லாது சுகாதார நடைமுறைகளை இடைவிடாது பின்பற்றுவது, தங்களையும் தமது மாவட்டத்தையும் பாதுகாப்பானதாக வைத்திருக்க இன்றியமையாததாகும்.

சுகாதாரதுறையினரது அயராத முயற்சியுடன் மக்களினது அர்ப்பணிப்பான ஒத்துழைப்புமே, கடுமையான இந் நிலைமையிலிருந்து முழுநாட்டினையும் வெளிக்கொணரவல்ல நடைமுறையாகுமென சுகாதார வல்லுநர்கள் தெரிவித்துள்ள நிலையில் மக்கள் இது தொடர்பில் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும்-என்றார்.

# ஏழு நாட்களில் இலங்கையில் 450 மரணங்கள்!

### உச்ச ஆபத்தில் தொற்று நேர்மறை வீதம்

**கொழும்பு, ஓக. 05**

**இலங்கையில் கொரோனா தொற்று மற்றும் மரணங்கள் அதிகரித்து வரும் நிலையில் கடந்த 7 நாட்களில் 450 கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளன.**

கடந்த திங்கட்கிழமை 74 மரணங்கள் பதிவானதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அறிவித்தார். ஜூன் 11 ஆம் திகதிக்குப் பின்னர் நாளொன்றில் பதிவான அதிக கொரோனா மரணங்கள் இதுவாகும்.

இதேவேளை, நேற்று முன் தினம் 2450 தொற்று நோயாளர்கள் பதிவாகினர். ஜூன் 23 ஆம் திகதி முதல் 2000-க்கும் குறைவான தினசரி தொற்று நோயாளர்கள் பதிவாகி வந்த நிலையில் ஜூலை 29 ஆம் திகதி முதல் 2000 க்கும் மேற்பட்ட தொற்று நோயார்கள்நாட்டில்பதிவு செய்யப்பட்டு வருகின்றனர்.

நாட்டில் மேற்கொள்ளப்படும் மிகக் குறைந்த பி.சி.ஆர். பரிசோதனைகளில் தொற்று நேர்மறை 18 வீதம் என்ற உச்ச ஆபத்தான அளவுக்குப் பதிவாகி வருகிறது. கடந்த 7 நாட்கள் பி. சி,ஆர். பரிசோதனை நேர்மறை 15 வீதமாக உள்ளது.

ஜூலை முதல் வாரத்தில் தொற்று நேர்மறை 10 வீதம் ஆக பதிவான நிலையில் இதில் சடுதியான அதகரிப்பு ஏற்பட்டுள்ளது.

## வடக்கில் தடுப்பூசி பெற்றவர்கள் எண்ணிக்கை 440,809 ஆக உயர்வு

கொழும்பு, ஓக. 05

வட மாகாண தடுப்பூசித் தரவுகளின் பிரகாரம் மாகாணத்தில் 30 வயதுக்கு மேற்பட்ட மக்கள் தொகையில் 67.04 வீதம் பேர் நேற்று முன் தினம் வரை குறைந்தது ஒரு கொவிட் தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டனர்.

மாகாணத்தில் 30 வயதுக்கு மேற்பட்ட மக்கள் தொகை 657, 547 ஆகப் பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில் இவர்களில் 440,809 பேர் நேற்று முன் தினம் வரை தடுப்பூசி பெற்றுள்ளதாக தரவுகள் தெரிவிக்கின்றன.

**யாழ்ப்பாணம்**

யாழ்ப்பாணத்தில் தடுப்பூசி பெறத் தகுதிபெற்ற 30 வயதுக்கு மேற்பட்ட 344,766 பேரில் நேற்று முன் தினம் வரை 229,982 பேர் குறைந்தது ஒரு தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டனர். இந்த இந்த வயதுப் பிரிவினரில் 66.71 வீதமாகும்.

**கிளிநொச்சி**

கிளிநொச்சியில் 30 வயதுக்கு மேற்பட்ட 72,000 பேரில் 46,431 பேர் நேற்றுமுன்தினம் வரை தடுப்பூசி போட்டுக்கொண்டனர். இது 30 வயதுக்கு மேற்பட்ட பிரிவினரில் 64.49 வீதமாகும்.

**முல்லைத்தீவு**

முல்லைத்தீவில் 30 வயதுக்கு மேற்பட்ட தடுப்பூசி பெறத் தகுதிபெற்ற 65,000 பேர் உள்ள நிலையில் நேற்று முன் தினம் வரை 43,766 பேர் தடுப்பூசி பெற்றுக்கொண்டனர். இது இந்த வயதுப் பிரிவினரில் 67.33 வீதமாகும்.

**மன்னார்**

மன்னாரில் 30 வயதுக்கு மேற்பட்ட பிரிவினர் 77,781 ஆக பதிவாகியுள்ள நிலையில் இவர்களில் 52,532 பேர் தடுப்பூசி பெற்றனர். இது 30 வயதுக்கு மேற்பட்ட மாவட்ட மக்கள் தொகையில் 67.54 வீதமாகும்.

**வவுனியா**

வவுனியாவில் 30 வயதுக்கு மேற்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 98,000 ஆக பதிவாகியுள்ளது. இவர்களில் 68,098 பேர் நேற்று முன்தினம் வரை தடுப்பூசி பெற்றுக்கொண்டனர். இது இந்த வயதுப் பிரிவினரில் 69.49 வீதமாகும்.

## நோய் அறிகுறியற்ற தொற்றாளர்களுக்கு வீட்டிலேயே சிகிச்சை அளிக்க திட்டம்!

கொழும்பு, ஓக. 05

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை மீண்டும் அதிகரித்துள்ள போதிலும் 'ஒட்சீசனுக்கு' எவ்வித தட்டுப்பாடும் ஏற்படவில்லை. அதேபோல நோய் அறிகுறிகள் தென்படாத தொற்றாளர்களுக்கு வீட்டில் வைத்தே சிகிச்சையளிக்கும் நடைமுறை தொடர்பில் சுகாதார அமைச்சு கவனம் செலுத்தியுள்ளது என்று அமைச்சரவை இணைப்பேச்சாளரும், அமைச்சருமான ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று முன் தினம் முற்பகல் அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது.

இதன்போது நாட்டில் மீண்டும் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அமைச்சர் ரமேஷ் பத்திரண மேலும் கூறியவை வருமாறு:

தேவையானளவு ஒட்சிசன் கையிருப்பில் உள்ளதால் அது தொடர்பில் வீண் சந்தேகம் கொள்ளவேண்டியதில்லை. வைத்தியசாலைகளில் உள்ள கட்டில்கள் தொடர்பில் சில பிரதேசங்களில் நெருக்கடி நிலை காணப்படுகின்றது. அதேபோல தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமையும் உண்மைதான்.

எனவே, தொற்றாளர்கள் அதிகளவு அடையாளம் காணப்படும் பகுதிகளில், நோய் அறிகுறிகள் தென்படாதவர்களுக்கு வீட்டில் வைத்து சிகிச்சையளிப்பதற்கான வேலைத்திட்டம் தொடர்பில் சுகாதார அமைச்சு கவனம் செலுத்தியுள்ளது. களுத்துறை மாவட்டத்தில் இந்தத் திட்டம் வெற்றிகரமாக முன்னெடுக்கப்படுகின்றது. நாட்டில் ஏனைய பகுதிகளிலும் இத்திட்டத்தை செயற்படுத்துவதற்கு சுகாதார அமைச்சு எதிர்ப்பார்க்கின்றது.

நாட்டில் தற்போது உயிரிழப்பவர்களில் 90 வீதமானோர் தடுப்பூசி பெறாதவர்கள். அதே போல நாட்பட்ட நோயினால் பாதிக்கப்பட்டவர்கள். எனவே, தடுப்பூசியை பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தடுப்பூசி மத்திய நிலையத்துக்கு செல்ல முடியாதவர்களுக்கு வீடுகளுக்கே வந்து செலுத்தப்படும். 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் இது விடயத்தில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். தடுப்பூசி பெறவேண்டியது உங்களின் பொறுப்பு-என்றார்.

## எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தீ விபத்து; நட்டஈட்டுக்கு ரூ 420 மில்லியன் ஒதுக்கீடு

கொழும்பு, ஓக. 05

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தீ விபத்துக்குள்ளானதில் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு நட்டஈட்டை வழங்குவதற்காக இதுவரையில் 420 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அதற்கமைய கம்பஹா, கொழும்பு, களுத்துறை ஆகிய மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட மீனவக் குடும்பங்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் இழப்பீடு தற்போது வழங்கப்பட்டு வருவதாக நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தீக்குள்ளானதால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு நட்டஈட்டை வழங்குவதற்கு முறையான மற்றும் ஒழுங்கான நடைமுறைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

## இலங்கையில் 79 வீதத்துக்கும் அதிகமாக சினோபார்ம் தடுப்பூசிகளே ஏற்றப்பட்டன

கொழும்பு, ஓக. 05

இலங்கையில் இதுவரை 12 மில்லியனுக்கு மேற்பட்ட கொவிட் 19 தடுப்பூசிகள் போடப்பட்டுள்ள நிலையில் அவற்றி 10 மில்லியனுக்கு மேற்பட்டவை சீனாவின் சினோபார்ம் தடுப்பூசிகள் என சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு புள்ளி விவரங்கள் கூறுகின்றன.

கடந்த 2 ஆம் திகதி வரையான தரவுகளின் பிரகாரம் இலங்கையில் போடப்பட்ட தடுப்பூசிகளில் 79 வீதத்துக்கும் அதிகமானவை சினோபாம் தடுப்பூசிகளாகும். 8,2844,63 பேர் சினோபார்ம் முதல் தடுப்பூசியையும் 1,803,524 பேர் இரண்டு தடுப்பூசிகளையும் பெற்றுள்ளனர்.

இலங்கையர்களில் 12 வீதமானவர்கள் அஸ்ட்ராசெனேகா - கொவிஷீல்ட் தடுப்பூசிகளைப் பெற்றுள்ளனர். 948,223 பேர் அஸ்ட்ராசெனேகா - கொவிஷீல்ட் ஒரு தடுப்பூசியையும் 630,136 பேர் இரண்டு தடுப்பூசிகளையும் பெற்றுக்கொண்டனர்.

6 வீதமாக மொடர்னா தடுப்பூசிகளும் நாட்டில் நிர்வகிக்கப்பட்டுள்ளன. 71,6581 பேருக்கு மொடர்னா ஒரு தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

2 வீதம் பேர் நாட்டில் பைசர் தடுப்பூசிகளைப் பெற்றுள்ளனர். 20,1507 பேர் பைசர் முதல் தடுப்பூசியையும் 198 பேர் இரண்டு தடுப்பூசிகளையும் பெற்றுக்கொண்டனர்.

1 வீதம் மட்டுமே நாட்டில் ஸ்புட்னிக் -5 தடுப்பூசி நிர்வகிக்கப்பட்டுள்ளது. 15,9081 ஸ்புட்னிக் -5 ஒரு தடுப்பூசியையும் 14,503 இரண்டு தடுப்பூசிகளையும் பெற்றுள்ளனர்.

## காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு பூட்டு

கொழும்பு, ஓக. 05

பத்தரமுல்லையில் அமைந்துள்ள காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் தலைமை அலுவலகம் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளது.

அந்த நிறுவனத்தில் பணியாற்றி வரும் பல அதிகாரிகளுக்கு கொரோனா வைரஸ் தொற்றுறுதியானதைத் தொடர்ந்து குறித்த அலுவலகம் இவ்வாறு மூடப்பட்டுள்ளது.

# கிளிநொச்சியில் கொரோனா வைத்தியசாலைகள் நிரம்பின

## ஒரே நாளில் 68 தொற்றாளர்கள்

கிளிநொச்சி, ஒக.05

**கிளிநொச்சி கிருஸ்ணபுரத்தில் உள்ள வட மாகாண தொற்று நோய் வைத்தியசாலை மற்றும் பாரதிபுரம் கொரோனா வைத்தியசாலை என்பன கொரோனா நோயாளிகளால் நிரம்பியுள்ளன என்று மாவட்ட சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.**

நாளுக்கு நாள் வடக்கில் அதிகரித்து வரும் தொற்றாளர்களால் இந் நிலைமை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கும் சுகாதார தரப்பினர்கள், எதிர்வரும் நாட்கள் நெருக்கடி மிக்கதாக அமையும் எனவும் தெரிவித்துள்ளனர்.

கிருஸ்ணபுரம் தொற்று வைத்தியசாலையில் மற்றும் பாரதிபுரம் கொரோனா வைத்தியசாலைகளில் நோயாளிகளால் நிரம்பியிருப்பதால் தற்போது முறிகண்டியில்

அமைந்துள்ள கொரோனா வைத்தியசாலைக்கு நோயாளர்கள் அனுப்பப்பட்டு வருகின்றனர். அங்கு பெண்களை மாத்திரமே அனுப்ப முடியும் எனவும் சுகாதார தரப்பு தெரிவித்துள்ளது.

இதேவேளை, கிளிநொச்சி மாவட்டத்தில் நேற்று முன்தினம் 68 கோவிட் 19 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என பிராந்திய தொற்று நோயியல் மருத்துவர் நிமால் அருமைநாதன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் முழங்காவில், ஜெயபுரம், கரைச்சி, கண்டாவளை என மாவட்டத்தில் பரவலாக தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி அறிவியல்நகர் ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் 25 பேர், அறிவியல் நகரில் உள்ள மத்திய வங்கியின் பிராந்திய அலுவலகத்தில் இரண்டு என பரலாக தொற்றாளர்கள் இனம் காணப்பட்டுள்ளனர்.

இதன்படி கடந்த ஜூலை மாதம் தொடக்கம் நேற்று வரையான காலத்தில் 445 பேருக்கு மேல் கிளிநொச்சி மாவட்டத்தில் கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளது.

## கொத்தலாவலை சட்டத்தில் திருத்தங்கள்

### சுதந்திர கட்சியின் யோசனை ஜனாதிபதியிடம்

கொழும்பு, ஒக. 05

கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக சட்ட வரைவில் மேற்கொள்ளப்படவேண்டிய திருத்தங்களை சுட்டிக்காட்டி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஜனாதிபதிக்கு கடிதம் எழுதியுள்ளது.

சுதந்திரக் கட்சியினால் குறித்த சட்ட வரைவை ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரைகளே இவ்வாறு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்குள் கொத்தலாவல தேசிய பாதுகாப்பு பல்கலைக்கழகம் உள்வாங்கப்படாமை உள்ளிட்ட விடயங்கள் அதில்சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

மேலும் அந்தக் கடிதத்தின் பிரதிகள் சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன, சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.






## கொத்தலாவலை சட்டவரைவுக்கு எதிராக யாழ்.பல்கலை முன்பாக போராட்டம்

யாழ்ப்பாணம், ஒக. 05

கல்வியை வியாபாரமாக்கும் கொத்தலாவல பல்கலைக்கழக சட்டமூலத்துக்கு எதிராக யாழ்ப்பாணத்தில் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

யாழ்.பல்கலைக்கழகம் முன்பாக நேற்று மதியம் இந்த அமைதி போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இலவச கல்வித்துறையை பாதுகாக்கவும் விரிவுபடுத்தவும் கல்வித்துறையில் இராணுவ தலையீடுகளை தடுக்க வேண்டியும் கல்வியை தனியார் மயப்படுத்தல் மற்றும் கல்வி நடவடிக்கையில் அரச தலையீடுகள் என்பவற்றை நிறுத்த கோரியே இந்தப் போராட்டம் முனனெடுக்கப்பட்டது. (அ-03)

## மன்னாரில் கொரோனாவால் 10 பேர் மரணம்

மன்னார், ஒக. 05

மன்னாரில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் ஒருவர் உயிரிழந்தார்.

66 வயதுடைய பெண் ஒருவரே மரணமடைந்தார்.

இதன்படி மன்னார் மாவட்டத்தில் கொரோனாத் தொற்றுடன் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 10 ஆக அதிகரித்துள்ளது எனவும் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி.வினோதன் தெரிவித்தார். (இ)

## கொத்தலாவலை சட்டமூலம் நாளை விவாதத்துக்கு வராது

கொழும்பு, ஒக. 05

கொத்தலாவலை பாதுகாப்பு பல்கலைக்கழக சட்டமூலம் இந்த வாரம் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படாதென அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்ஷ நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

குறித்த சட்டமூலம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுமா என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போதே அவர் இதனை தெரிவித்தார்.

சட்டமூலம் தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மக்கள் தங்கள் கருத்துகளை தெரிவிக்க அதிக நேரம் தேவை என்று கருதியதாலேயே சட்டமூலம் இவ்வாரம் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படாது என அவர் தெரிவித்தார்.

எவ்வாறிருப்பினும் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக சட்டமூலம் விவாதிக்கப்படும் திகதி குறித்து இதுவரை அறிவிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## பொலிஸ் பொறுப்பதிகாரியின் கையில் இரு விரல்கள் சேதம்!

கொழும்பு, ஒக. 05

பாராளுமன்றத்திற்கு அருகில் நேற்று முன் தினம் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது அதனை தடுத்து நிறுத்த முயற்சித்த மஹரகம பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி காயமடைந்துள்ளார் என பொலிஸ் ஊடக பேச்சாளரும், சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.

பொலிஸாரின் ஆணையை மீறி ஆர்ப்பாட்டகாரர்கள் முன்னோக்கி நகர்ந்தபோது வீதித் தடைகள் போடப்பட்டிருந்தன. அவற்றை தகர்த்துத் தள்ளி ஆர்ப்பாட்டக்காரர்கள் முன்னோக்கிச் செல்ல முயற்சித்தனர்.

இதன் போது, மஹரகம பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் கையில் இரண்டு விரல்கள் சேதமடைந்துள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் தெரிவித்தார். இந்த விடயம் தொடர்பாக சிறப்பு விசாரணை நடத்தப்படவுள்ளதாக தெரிவித்தார்.

## இருக்கைகள் எண்ணிக்கைக்கு மேலதிகமாக பஸ்களில் பொதுமக்கள் பயணிக்கமுடியாது

கொழும்பு, ஒக. 05

பஸ்களில் இருக்கைகளின் எண்ணிக்கைக்கு மேலதிகமாக பயணிகளை ஏற்றிச்செல்லும் சாரதிகள் மற்றும் நடத்துநர்களை கைது செய்து தனிமைப்படுத்தல் சட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, நேற்று முதல் இந்த நடைமுறையை அமுல்படுத்துமாறு பொலிஸ் மா அதிபருக்கு போக்குவரத்து இராஜாங்க அமைச்சு எழுத்து மூலம் அறிவித்துள்ளது.

பஸ்களில் இருக்கைகளுக்கு மேலதிகமாக பயணிகள் ஏற்றப்படுவதாக போக்குவரத்து இராஜாங்க அமைச்சருக்கு பல முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

குறித்த முறைப்பாடுகளை கருத்திற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

இது தொடர்பாக பொலிஸார் நேற்று முதல் கண்காணிப்பு பணிகளில் ஈடுபட்டுள்ளனரென அவர் குறிப்பிட்டார்.

## ஆபத்தான கட்டத்தில் கட்டுப்பாடுகளை தளர்த்துவது எரியும் நெருப்பில் எரிபொருளை சேர்ப்பது போன்றது

### மருத்துவ வல்லுநர்கள் சங்கம் அரசுக்கு எச்சரிக்கை

கொழும்பு, ஒக. 05

கோவிட்-19 வைரஸின் டெல்டா திரிபு நாட்டில் வேகமாக பரவி வரும் நேரத்தில் பயணக் கட்டுப்பாடுகளை தளர்த்துவது குறித்து மருத்துவ வல்லுநர்கள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

டெல்டா திரிபு காரணமாக தினசரி கோவிட்-19 நோய்த் தொற்றாளர்கள் எண்ணிக்கை அதிகரித்து வரும் நேரத்தில் கட்டுப்பாடுகளைதளர்த்துவதற்கான அரசின் முடிவு நெருப்புக்கு எரிபொருளைச் ஊற்றுவது போன்றது என்று சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கை நிலைமையை மோசமாக்கும் என்று மருத்துவ வல்லுநர்கள் சங்கம் கோடிட்டுக்காட்டியுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது

கோவிட்-19 தொற்றாளர்கள் எண்ணிக்கை மேலும் அதிகரித்தால், அது கடுமையான விளைவுகளை ஏற்படுத்தும். நாட்டின் சுகாதார அமைப்பை மூழ்கடிக்கும்.

நாட்டில் அதிக சுற்றுலாப் பயணிகளின் வருகையை எதிர்பார்ப்பது வெறும் கனவாக இருக்கும்.

எனவே தற்போதைய சூழ்நிலையை மறுபரிசீலனை செய்து, தற்போதுள்ள சுகாதாரம் மற்றும் பயணக் கட்டுப்பாடுகளைத் திருத்தவேண்டும்.

மக்களின் வாழ்வாதாரங்களை பாதுகாத்து அவர்களுக்கு போதிய வருமானத்தை வழங்க வேண்டியதன் அவசியமாகும். ஆனால் குடிமக்களின் உயிரைக் காப்பாற்றுவதே தற்போது அதிக முன்னுரிமையாக இருக்க வேண்டும்- என்றுள்ளது.

# தேவை ஏற்பட்டால் நாடு முடக்கப்படும்

## அரசாங்கம் அறிவிப்பு



கொழும்பு, ஒக. 05

**நாட்டில் தேவை ஏற்பட்டால் மட்டுமே முடக்கம் அமுல் படுத்தப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.**

**தேவைகளின் அடிப்படையில் எந்த முடிவும் எடுக்கப் படும் என இராஜாங்க அமைச்சர் மருத்துவர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே நேற்று புதன்கிழமை பாராளுமன் றத்தில் தெரிவித்தார்.**

இலங்கையின் சில பகுதி களில் கொரோனா வைரஸ் பரவுவது குறித்து நேற்று பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹினி விஜேரத்ன, பொது மக்களை வைரஸிலிருந்து பாது காக்க அரசாங்கம் முன்னெடுக்க வுள்ள நடவடிக்கைகள் குறித்து கேள்வி எழுப்பினார்.

அத்தோடு, மாத்தளை - ரத்தோட்டையில் வைரஸ் பரவி வருவதாகவும் இதன் விளை வாக ஏராளமான மக்கள் பாதிக் கப்பட்டுள்ளனரெனவும் அவர் கூறினார்.

மேலும் ரத்தோட்டையில் முடக்கத்தை அமுல்படுத்துவது குறித்து அரசாங்கம் பரிசீலிக்கி றதா என்றும் ரோஹினி விஜே ரத்ன கேள்வியெழுப்பினார்.

இதற்கு பதிலளித்த இரா ஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே, தேவைகளின் அடிப் படையில் எந்த முடிவும் எடுக் கப்படும் என்றும் தேவை ஏற்பட்டால் மட்டுமே முடக் கம் அமுல்படுத்தப்படும் என்றும் தெரிவித்தார்.



## எல்ல பொலிஸ் பிரிவில் காட்டுத் தீ

கொழும்பு, ஒக. 05

எல்ல பொலிஸ் பிரிவுக்குட் பட்ட கினளன் பெருந்தோட் டப் பகுதிகளில் காட்டுத் தீ வேகமாக பரவிவருகின்றது.

குறித்த பகுதியில் நிலவும் வரட்சி மற்றும் காற்றுடன் கூடிய காலநிலையினால், காட் டுத் தீ வேகமாகப் பரவி, சுமார் ஐந்து ஏக்கருக்கு மேல் பற்றைப் புல் தரை முற்றிலுமாக தீக்கிரை யாகியுள்ளது.

இப் பற்றைப் புல் தரைப் பகுதியில் அமைந்திருந்த குடிதண்ணீர்க் குழாய்கள் பெருமளவில் முற்றாக சேத மாகியுள்ளன.

இத் தீயைக் கட்டுப்பாட்டுக் குள் கொண்டு வர பெரும் முயற் சிகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. இது குறித்த விசார ணைகள் முன்னெ டுக்கப்பட்டுள்ளன. விஷ மிகளின் செயலாக இருக் கலாமென்றும் கருதப்படுகின் றது. (அ)

## நுண்நிதி கடன் சட்ட வரைவு விரைவில் பாராளுமன்றுக்கு



கொழும்பு, ஒக. 05

நுண்நிதி மற்றும் கடன் ஒழுங்குமுறை சட்ட வரைவு விரைவில் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் என சமுர்த்தி, வீட்டுப் பொருளா தாரம், நுண் நிதி, சுயதொழில் மற்றும் வணிக மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

சமுர்த்தி இராஜாங்க அமைச்சின் கேட்போர் கூடத் தில், நுண்நிதி தொடர்பான குறைகளுக்காக அறிமுகப்படுத் தப்பட்ட ஹொட்லைன் திட் டத்தை ஆரம்பித்து வைக்கும் போது இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க இதனை கூறினார்.

அடையாளம் காணப்பட்ட பல குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் நோக்கில் உத்தேச வரைவை விரைவில் பாராளு மன்றத்தில் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் கூறினார்.

அமைச்சரவையில் ஒப்புதல் பெற்ற பிறகு இந்த வரைவு தற்போது சட்ட வரைவாளர் துறையில் உள்ளது என்று அமைச்சர் குறிப்பிட்டார்.

நுண்நிதி உட்பட பொதுமக் களுக்கு வழங்கப்படும் நியாய மற்ற கடன்களை ஒழுங்கு படுத்த அரசாங்கம் நம்புகிறது.

புதிய ஹொட்லைன் மூலம் பெறப்பட்ட விவரங்களை அமைச்சுக்கு வழங்க நுண்நிதி நிறுவனங்கள் ஒப்புக்கொண் டுள்ளன. பெறப்பட்ட தரவு களின்படி, நிதி அமைச்சு, இலங்கை மத்திய வங்கி மற்றும் பிற தொடர்புடைய நிறுவனங் களுடன் கலந்துரையாடல் நடத்தப்படும். நுண்நிதி கடன் வழங்கும் நிறுவனங்களுக்கு பாதுகாப்பு மற்றும் ஆதரவை வழங்குவதோடு, பொதுமக்கள் சிரமத்துக்கு ஆளாகாமல் இருப் பதை உறுதி செய்ய நடவ டிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் கூறினார்.

## சுற்றுலாத்தளமாகும் கிளிநொச்சி குளம்

கிளிநொச்சி, ஒக. 05

கிளிநொச்சி நகர மத்தியில் அமைந்துள்ள கிளி நொச்சி குளத்தை அபிவிருத்தி செய்து, அதனை சுற்றுலாத்தளமாக அமைப்பதற்கான திட்ட முன் மொழிவுகள் முன்வைக்கப்பட் டுள்ளது.

இந்த நிலையில் குறித்த குளத்தைக் கட்டம் கட்டமாக அபிவிருத்தி செய்து பொழுது போக்கு மையமாக மாற்றும் வகையில் திட்டம் முன் மொழியப்பட்டுள்ளது.

அப்பகுதியில் நடைபயிற்சிக்கான வலயம், சிறுவர் பூங்கா, நீரில் பயணிக்கும் வகையிலான வசதி, பொழுதுபோக்கு வசதிகள், மின்னொளி யூட்டல், வர்த்தக வசதிகள் உள்ளிட்ட விட யங்களை உள்ளடக்கி அபிவிருத்தி செய்வதற்கான திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது.

இதற்கான திட்டமிடல் ஒன்று இரணைமடு நீர்ப்பாசன பொறியியலாளர் செந்தூரனால் நேற்று குறித்த குளத்தை பார் வையிட வந்த குழுவினரிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

குறித்த திட்டமிடல் அமைச் சரவையில் சமர்ப்பிக்கப்பட்டு பின்னர் அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படும் என தெரி விக்கப்படுகின்றது.

குளத்தின் சூழவுள்ள பகுதி அணை கட்டப் பட்டு, அதில் நடை பயிற்சிக்கான வசதிகள், இருக்கை வசதிகள் உள்ளடக் கிய முதல் கட்டப் பணிகளுக்கு 11 கோடி ரூபாய் செலவுத் தொகை மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் பொழுதுபோக்கு இடங்கள் மற்றும் நடைபயிற்சிக்கான பொருத்த மான இடங்கள் இல்லாத நிலையில் குறித்த



திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டால் நன்மைய ளிக்கும் என மாவட் டத்தில் உள்ள புத்திஜீவிகள் தெரிவிக்கின்றனர்.

இயற்கையை ரசித்தல், குடும்ப சுற்றுலாக்கள், பொழுதுபோக்குகள், நடைபயிற்சி உள்ளிட்ட வற்றை ஏற் படுத்தி கொடுக்கும் வகையிலான குறித்த திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டால் மக்கள் மன உளைச்சல் நிலையிலிருந்து மீளவும், இளைஞர் மத்தியில் காணப்படும் போதைப் பொருள் பாவனை உள்ளிட்ட நிலையிலிருந்து விடுபட்டு நல்லதொரு சமூ கத்தை கட்டியெழுப்ப முடியும் எனவும் அவர்கள் நம்பிக்கை வெளியிடு கின்றனர்.

இந்த திட்டமானது பல்வேறு அமைப்புக்கள், கல்வியலாளர்கள், சமூகங்களால் முன் மொழியப் பட்ட விடயம் என்பதாலும், மாவட்டத்துக்கான பிர தான பொழுதுபோக்கு மையமாகவும் பொருளாதாரத்தை ஈட்டவல்ல திட்டம் என்பதா லும் அதனை விரைவாக நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்க சிவில் அமைப்புக்கள் மற்றும் சமூக மட்ட அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள் ளனர்.

# அநீதியாக தடுத்து வைக்கப்பட்டுள்ளேன்!

## ஜனாதிபதி முன்னிலையில் ரிஷாத் தெரிவிப்பு

கொழும்பு, ஒக. 05


ஒரேயொரு காரணத்தை மாத்திரம் வைத்துக்கொண்டு தன்னை விசாரணைகள் இன்றி வெறுமனே தடுத்து வைத்துள் ளதாக பாராளுமன்ற உறுப்பி னர் ரிஷாத் பதியுதீன் பாராளு மன்ற சபையில் தெரிவித்தார்.

ஜனாதிபதி, இதன்போது விசேட விஜயமொன்றை மேற்கொண்டு சபை அமர்வில் கலந்துகொண்டார்.

இங்கு கருத்து தெரிவித்த ரிஷாத், என்னை ஏப்ரல் மாதம் 24ஆம் திகதி கைது செய்தார் கள். 5 நாட்கள் மாத்திரமே என்னிடம் விசாரணைகளை மேற்கொண்டார்கள். இன்று டன்(நேற்று) 102 நாட்கள் நிறைவடைந்துள்ளன. 97 நாட் கள் என்னை தனியறையிலேயே வைத்துள்ளார்கள். 24 மணி நேரமும் அறையை மூடியே இருக்கிறது. மலசலகூடத்துக்கு செல்வதற்காக மாத்திரம் வெளியே செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது-என்றார்.

அத்தோடு, நேரடியாகவே ஜனாதிபதியை அழைத்து தனது ஆதங்கத்தை ரிஷாத் இவ்வாறு பதிவு செய்தார்.

"ஜனாதிபதி அவர்களே, என்னை ஏன் கைது செய்தீர்கள் என பொலிஸ் பொறுப்பதி காரியிடம் கேட்டபோது,



எனது அமைச்சின் மேலதிக செயலாளரான பாலசுப்ரமணிய முடன் ஒன்றரை நிமிடம் தொலைபேசியில் உரையாடிய தற்காக கைது செய்துள்ளதாக அவர் சொன்னார். வேறு எந்தவொரு காரணங்களும் இல்லையென அவர் தெரிவித் தார்" என்று ரிஷாத் கூறினார்.

ரிஷாத்தின் கருத்துக்கு பதில ளித்த அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னான்டோ, பால சுப்ரமணியம் தற்போது நாட் டில் இல்லையெனவும் அவர் வெளிநாட்டுக்கு தப்பிச்சென் றுள்ளார் என்றும் குறிப்பிட் டார்.

இதனைத் தொடர்ந்து ரிஷாத் பதியுதீன் எம்.பிக்கு வழங்கப் பட்ட 2 நிமிட கால அவகாசம் நிறைவடைந்துள்ளதாக தெரி வித்து சபாநாயகர் ஒலி வாங்கியை நிறுத்திவிட்டு, பாராளுமன்ற சபை நடவடிக் கைகளை தொடர்ந்து முன்னெ டுத்தார்.

(அ)

# கிழக்கில் மீன் வாங்க தயங்கும் மக்கள் வாழ்வாதாரத்துக்கு போராடும் மீனவர்!

வ.சக்திவேல்

**“நான் கடலில் 25 வருடங்களுக்கு மேலாக கரைவலை மீன் பிடித்தொழிலில் ஈடுபட்டு வருகின்றேன் இதற்கு முன்னர் எமது தொழில் மிகவும் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. தற்போது தென் பகுதியில் கப்பல் ஒன்று தீப்பற்றிய பின்னர் எமது கடல் பகுதியிலும், கடல்வாழ் உயிரினங்கள் இறந்த நிலையில் கரை ஒதுங்குவதனால் நாமும் அச்சமடைந்தள்ளோம்.**



“நான் களுதாவளையிலிருந்து கொண்டு 20 வருடங்களுக்கு மேலக இருந்து கடல் மீன் வியாபாரத்தில்தான் ஈடுபட்டு வருகின்றேன். தற்போது இலங்கையின் தென்பகுதி கடலில் கப்பல் ஒன்று எரிந்ததன் பின்னர் சில கடல்வாழ் உயிரினங்கள் இறந்த நிலையில் கரை ஒதுங்குவதனால் என்னிடம் மக்கள் மீன்களைக் கொள்வனவு செய்ய வருகின்றார்களில்லை. நானும் நாளாந்தம் எனது வியாபாரத்தில் கிடைக்கும் பணத்தைக் கொண்டுதான் கடல் மீன்களைக் கொள்வனவு செய்து விற்று எனது குடும்பத்தைப் பாதுகாத்து வருகின்றேன். மீன்களை எடுத்துக் கொண்டு வந்து வெட்டி வைத்து விட்டு பார்த்திருக்கின்றேன். யாரும் வாங்குவதற்கு வருகின்றார்கள் இல்லை, இதனை விற்றால்தான் எனது குடும்பத்திலும் அடுப்பு எரியும். இது தொடர்பில் கடல் மீன்களை மக்கள் சாப்பிடலாமா சாப்பிட முடியாதா? என்பது தொடர்பில் அரசாங்கம் மிக விரைவில் தெரிவிக்க வேண்டும். இவ்வாறு இந்த நிலைமை தொடர்ந்தால் எம்மைப்போன்ற கடல் மீன்களை விற்பனை செய்யும் சிறு மீன் வியாபாரிகளின் நிலமை என்னாகும்” என தனது மன ஆதங்கத்தை தெரிவிக்கின்றார் கடல் மீன்களைவிற்பனை செய்யும் தங்கவடிவேல்.

விவசாயம், மீன்பிடி, கால்நடை வளர்பு போன்ற பிரதான தொழிலாகக் கொண்டமைந்த மாவட்டமே மட்டக்களப்பு மாவட்டமாகும். இலங்கையின் இரண்டாவது மிகப்பெரிய வாவியான மட்டக்களப்பு வாவியிலும், இழக்கின் வங்கக் கடலிலும், ஏனைய குளங்களிலும் ஆயிரத்திற்கு மேற்பட்டோர் தமது ஜீவனோபாயத் தொழிலாக மீன்பிடியக் கொண்டுள்ளனர்.

‘எக்ஸ் பிறஸ் பேர்ள்’ கப்பல் தென் பகுதிக் கடலில் தீப்பற்றி எரிந்ததன் பின்னர்தான் இலங்கையின் நாலா பாக மும் கடல் வாழ் உயிரினங்கள் இறந்த நிலையில் கரை ஒதுங்குகின்றன என்ற மீனவர்களும். பொதுமக்களும் சந்தேகிக்கின்றனர். இந்நிலையில்தான் மக்களும் கடல் உணவுகளை புசிப்பதிலிருந்து தவித்து வருகின்றார்கள் எனலாம். இது இவ்வாறு இருக்க கடல் மீன்களை விற்பனை செய்து வரும் தங்கவடிவேல் போன்ற சிறு மீன் வியாபாரிகளின் வாழ்வாதாரம் இக்காலகட்டத்தில் முற்றாக பாதிக்கப்பட்டுள்ளதாக கவலை தெரிவிக்கின்றனர்.

எக்ஸ் - பிரஸ்பேள் கப்பல் தீப்பற்றிய பின்னர் கடல் ஆமைக்கள் இறந்த நிலையில் கரை ஒதுங்குவதானால் மக்களின் மனங்களில் ஒருவித பீதி எழுந்துள்ளது. இவ்வாறு இறந்த ஆமைகளை துறைசார்ந்தவர்கள் பரிசோதனைகளுக்காக எடுத்துச் சென்றுள்ள போதிலும், அதன் முடிவுகளை இதுவரையில் அவர்கள் வெளியிடவில்லை. அந்த அதிகாரிகள் சரியான விளக்கங்களையும், பரிசோதித்த ஆமைகள் தொடர்பிலான விளக்கங்களையும் மக்களுக்கு வழங்கினார்கள் என்றால் மக்களும் தெளிவடைந்து கொள்வார்கள். இதனால் கடல் மீன்களை விற்பனை செய்யும் எமது வியாபாரம் முற்று முழுதாகப் பாதிக்கப்பட்டுள்ளது. எமது வாழ்வாதாரத் தொழில் இந்த கடல் மீன் வியாபாரம் மாத்திரம்தான் தற்போதைய நிலையில எமது நிலைமை மிகவும் மோசமான நிலையில் உள்ளது. என கடற்றொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கடற்றொறிலாளர்கள் தற்போது அவர்களது படகுகளையும், தோணிகளையும் கரைசேர்த்து வைத்துவிட்டு அவர்களது மீன் வாடிகளில் உள்ளதையும் அவதானிக்க முடிகின்றது.

நான் கடலில் 25 வருடங்களுக்கு மேலாக கரைவலை மீன் பிடித்தொழிலில் ஈடுபட்டு வருகின்றேன் இதற்கு முன்னர் எமது தொழில் மிகவும் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. தற்போது தென் பகுதியில் கப்பல் ஒன்று தீப்பற்றியான் பின்னர் எமது கடல் பகுதியிலும், கடல்வாழ் உயிரினங்கள் இறந்த நிலையில் கரை ஒதுங்குவதனால் நாமும் அச்சமடைந்தள்ளோம். இந்நிலையில் மக்களும் ஏனைய வியாபாரிகளும். எம்மிடம் மீன்களைக் கொள்வனவு செய்ய வருகின்றார்களில்லை. எனவே சம்மந்தப்பட்ட அதிகாரிகள் ஆய்வுகளை மேற்கொண்டு நாம் கடல் மீனகளைச் பிடிக்கலாமா? இல்லையா? என்பது தொடர்பில் தீர்க்கமான முடிவினை வெளிப்பத்த வேண்டும் எனக் கூறுகின்றார் கரைவரை மீன் பிடித் தொழிலில் ஈடுபடும் இ.பிரசாந்தன்.

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் எரிந்த பின்னர் ஆங்காங்கே கடல்வாழ் உயிரினங்கள் இறந்து கரைஒதுங்குகின்ற தற்போதைய நிலையில் நடமாட்டத் தடையிலிருந்து வெளியே வந்து தொழில் செய்ய முடியதாக ஒரு பிரிவினராக கடற்றொழிலாளர்கள் தற்போதைய நிலையில் காணப்படுகின்றார்கள். குறிப்பாக படகுகளில் மீன்பிடிக்கப் செல்பவர்கள், அவர்களுக்கு உதவியாக செல்பவர்கள், மீன்களை ஏற்றி இறக்குபவர்கள், மொத்த வியாபாரிகள், உள்ளூர் வியாபாரிகள், சாரதிகள், மீன் வாடிகளிலிருந்து வலை பின்னுபவர்கள், கரை வலை இழுப்பவர் கள், என பல தரப்பட்டவர்களும், தற்போதைய நிலையில் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

கிழக்கு மாகாணம் வெளிமாகாணத்திற்கும், வெளிநாடுகளுக்கும் கடல் மீன்களை ஏற்றுமதி செய்யும் மாகாணமாகத் திகழ்கின்றது. ஆனால், தற்போதைய நிலையில் மக்கள் கடல் மீன்களைக் கொள்வனவு செய்வதற்கு அச்சடைந்துள்ள காரணத்தால் மீனவர்களும் தொழிலில் ஈடுபடுவதை வெகுவாகக் குறைத்துள்ளனர். இதனால் உள்ளூர் பொருளாதாரமும், தேசிய பொருளாதாரத்திலும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகத்தான் நான் இதனைப் பார்க்கின்றேன் என மட்டக்களப்பிலிருந்து இயங்கிவரும், கிழக்கு சமூக அபிவிருத்தி மையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் புஹாரி முஹமட் தெரிவிக்கின்றார்.

இவ்வாறு கடலில் மீன் பிடிப்பவர்களும். அந்த மீன்களை கொள்வனவு செய்து கொண்டு விற்பனை செய்பவர்களும் தமது ஆதங்கக் கருத்தக்களைத் தெரிவிக்கும் இந்நிலையில் -

தாம் இதுவரையில் கடல் உணவுகளைத்தான் புசித்து வந்தோம், தற்போது ஊடகங்கள் வாயிலாக கடல்வாழ் உயிரினங்கள் இறந்த நிலையில் கரை ஒதுங்குவதனால் கடல் மீன்களைக் கொள்வனவு செய்வதை நிறுத்திவிட்டோம். கடல் உணவுகளைக் கொள்வனவு செய்வதற்கு எமக்கு அச்சமாகவுள்ளது. இதுவரைகாலமும் கடல் உணவுகளைக் கொள்வனவு செய்து வந்த மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடலில் மீன் பிடிக்க வேண்டாம், கடல் உணவுகளைச் சாப்பிட வேண்டாம் என்ற எந்தவொரு அறிவித்தல்களையும் நாம் மக்களுக்கும், மீனவர்களுக்கும், இதுவரையில் வழங்கவில்லை. நடமாட்டத்தடை விதிக்கப்பட்ட காலத்திலும், மீன் பிடிப்பதற்கும், மீன்வியாபாரம் செய்வதற்குரிய அனுமதியை நாம் வழங்கியிருந்தோமே தவிர எந்தவொரு தடையையும் ஏற்படுத்தியிருக்கவில்லை. இதனை நான் காலை 8 மணிமுதலை இரவு 10 மணிவரைக்கும் காரியாலயத்தில் இருந்து கொண்டு மீனவர்களுடனும், நேரடி தொடர்பிலிருந்து கடமை செய்து வருகின்றேன்.

கடற்றொழில் செய்வதிலும் கடல் மீன்களை உண்பதில் எதுவித பிரச்சனையும் இல்லை என எமது அமைச்சர் தெரிவித்திருக்கின்றார். மட்டக்களப்பிலோ அல்லது இலங்கையிலோ கடல்மீன் சாப்பிடக்கூடாது என எமது திணைக்களத்தினால் எதுவித அறிவித்தலும் விடுக்கப்படவில்லை. மக்கள் தாங்களாகவேதான் பீதியடைந்து கடல் மீன்களை கொள்வனவு செய்யாமலுள்ளார்களே தவிர மாறாக அமைச்சோ, திணைக்களமோ எந்தவொரு கட்டுப்பாடுகளையும் விதிக்கவில்லை. எனவே கடற்றொழிலில் ஈடுபடும் மீனவர்கள் சுதந்திர மாக அவர்களது தொழிலைச் செய்வதற் கும் மக்கள் கடல் உணவுகளை உண்பதற் கும் நாம் எதுவித கட்டுப்படுகளையும் விதிக்கவில்லை என கடற்றொழிற் திணைக்களத்தின் மட்டக்களப்பு மாவட்ட உதவிப் பணிப்பாளர் ருக்ஷன் குரூஸ் தெரிவித்தார்.

கோவிட்- 19 நிலமையால் மீன் பிடித்துறைக்கு பாரியபாதிப்பு ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் எக்ஸ்பிறஸ் பேர்ள் கப்பல் எரிந்ததனால் அதிலிருந்த வரும் வெளியேற்றங்களிலிருந்து, கடல் வளத்திற்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் மீன்பிடியில் ஈடுபடுவதுவும், கடல் உணவுகளை மக்கள் கொள்வனவு செய்வதுவும் குறைந்தளவாகவே உள்ளது. இதனால் கோவிட் -19 மற்றும் கப்பல் எரிவு ஆகிய இரண்டும் சேர்ந்த மீனவர்களின் வாழ்விலும் பொருளாதாரத்திலும் அதிகளவு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

மட்டக்களப்பின் பொருளாதார நிலையை நோக்கினால் விவசாயத்திற்கு அடுத்ததாக மீன்பிடி பெரும் பங்களிப்பைச் செய்கின்றது. இந்த பங்களிப்பு மிகவும் குறைந்து கொண்டு செல்கின்ற போக்கைக் காணக் கூடியதாகவுள்ளது. தற்காலத்தில் வேறுமாகாணத்திற்கும் போக்குவரத்துச் செய்யமுடியத நிலமை உள்ளது. இது அதிக பாதகத் தன்மையை ஏற்படுத்தியிருக்கின்றது. இதிலிருந்து மீழ்வதற்கு மக்கள் மத்தியிலும், விழிப்புணர்வுகளை மேற்கொள்ள வேண்டும். என துறைசார்ந்தவர்கள் கருதுகின்றனர்.



எனவே எது எவ்வாறு அமைந்தாலும் கடற்றொழிலை நம்பி தமது வாழ்வாதாரத்தை ஈட்டும் மக்களின் வாழ்வில் ஒளி ஏற்றவும், கடல் உணவுகளைப் புசிப்பது தொடர்பிலான விடைங்களையும் மக்களுக்கு சம்மந்தப்பட்டவர்கள் மிகவிரைவில் தெழிவு படுத்த வேண்டும் என்பதோடு, இறந்த நிலையில் கரை ஒதுங்கும் கடல்வாழ் உயிரினங்களின் உயிரிழப்புக்கான காரணங்களையும் மக்களுக்கு அதிகாரிகள் வெளியிடவேண்டும் என்பதுவே அனைவரினதும் எதிர்பார்ப்பாகும்.



# சீனாவை மீண்டும் அச்சுறுத்தும் கொரோனா! வுஹானில் 1.1 கோடி பேருக்கு பரிசோதனை

சிறிய எண்ணிக்கையிலான கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் மீண்டும் கண்டறியப்பட்டுள்ளதால் சீனாவின் வுஹான் நகரில் உள்ள ஒட்டுமொத்த மக்களுக்கும் கோவிட்-19 பரிசோதனை நடத்த அந்நாட்டு அதிகாரிகள் திட்டமிட்டுள்ளனர்.

2019ஆம் ஆண்டின் இறுதியில் உலகிலேயே முதல் முறையாக கொரோனா வைரஸ் தொற்று இங்குதான் கண்டறியப்பட்டது. அதன் பின்பு சுமார் 1.1 கோடி மக்கள்தொகை கொண்ட இந்த நகரம் உலகெங்கும் பேசுபொருள் ஆனது.

வுஹானில் ஓராண்டு காலத்துக்கும் மேலாக கொரோனா வைரஸ் தொற்றால் யாரும் பாதிக்கப்பட்டது கண்டறியப்படாத சூழலில் தற்போது ஏழு பேருக்கு கோவிட்-19 தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. இவர்கள் அனைவருக்கும் உள்நாட்டிலேயே நோய் பரவல் நிகழ்ந்துள்ளது.

கடந்த பல மாதங்களாக சீனாவில் கொரோனா வைரஸ் தொற்று மட்டுப்பட்டு இந்த சூழலில் கடந்த 10 நாட்களில் சுமார் 300 பேருக்கு கோவிட்-19 தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

சீனாவில் உள்ள 15 மாகாணங்களில் இந்த பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக பெருந்திரளான மக்களுக்கு கொரோனா பரிசோதனை செய்வது மற்றும் பொதுமுடக்கக் கட்டுப்பாடுகள் விதிப்பது உள்ளிட்ட நடவடிக்கைகளில் சீன அரசு இறங்கியுள்ளது.

கொரோனா வைரஸ் திரிபுகளிலேயே மிகவும் எளிதில் பரவக்கூடிய தன்மை உடைய 'டெல்டா' திரிபு மற்றும் உள்நாட்டு சுற்றுலா காலம் தொடங்கியுள்ளது ஆகியவை தற்போதைய வைரஸ் பரவலுக்கு காரணம் என்று சீன அரசு அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

செவ்வாய்க்கிழமை மட்டும் சீனாவில் 90 பேருக்கு புதிதாக கோவிட்-19 தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இவர்களில் 51 பேருக்கு நாட்டுக்குள்ளேயே கோவிட் உண்டாகியுள்ளது என்று சீனாவின் தேசிய சுகாதார ஆணையம் தெரிவிக்கிறது. திங்களன்று 55 பேருக்கு சீனா முழுவதும் உள்நாட்டில் இருப்பவர்கள் மூலம் தொற்று உண்டானது உறுதிசெய்யப்பட்டது.

தங்கள் நாட்டு எல்லைக்குள்ளேயே கொரோனா வைரஸ் பரவலை கட்டுப்படுத்துவதை சீனா பெருமளவு வெற்றிகரமாக செய்து முடித்திருந்தது.

ஆனால், தற்போதைய தொற்று, சீனாவில் உள்ள நான்ஜிங் நகரத்திலுள்ள விமான நிலையத்தின் ஊழியர்கள் மூலம் முதன் முதலில் தெரிய வந்தது பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

இங்குள்ள 92 லட்சம் மக்களுக்கும் மூன்று முறை கொரோனா வைரஸ் பரிசோதனை நடத்திய அரசு, பல்லாயிரம் பேர் வசிக்கும் பகுதிகளில் பொது முடக்கத்தையும் அமுல்படுத்தியது.

ஆனால் சென்ற வார இறுதியில் ஹுனான் மாகாணத்தில் உள்ள பிரபலமான சுற்றுலா தலமான சாங்ஜியாச்சியில் பலருக்கு கொரோனா தொற்று உறுதியாகியுள்ளது. நான்ஜியாங் நகரத்துக்கு வந்த பயணிகள் இங்கு வருகை தந்ததாக கூறப்படுகிறது.

சாங்ஜியாச்சியில் உள்ள ஒரு கலைக் கூடத்துக்குச் சென்ற சுமார் 5 ஆயிரம் பேரைக் கண்டறியும் முயற்சிகளில் சுகாதார அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்.

இந்தக் கலைக் கூடத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகளில் பங்கெடுத்த பொதுமக்கள் தங்களது சொந்த ஊருக்குத் திரும்பிச் சென்றுள்ளனர்.

சாங்ஜியாச்சி நகரம் இப்போதைய பரவலின் ஆரம்பப் புள்ளியாக என்று சீனாவின் முன்னணி சுவாசக் கோளாறுகள் சிகிச்சை நிபுணர் ஜூங் நான்ஷான் தெரிவித்துள்ளார்.

இப்போதைய பரவல் தலைநகர் பெய்ஜிங்கையும் சென்றடைந்துள்ளது. உள்நாட்டில் இருப்பவர்கள் மூலம் பலருக்கும் தொற்று ஏற்பட்டிருப்பது இங்கும் உறுதியாகியுள்ளது. **- நன்றி பி.பி.சி.**

---



# சீனாவின் புதிய நண்பன் தலிபான்: ஆப்கானிஸ்தானின் 3 ட்ரில்லியன் டொலர் கனிம வளங்களை குறிவைக்கும் சீனா?

**9/11** பயங்கரவாத இரட்டைக் கோபுரத் தாக்குதலுக்குப் பிறகு ஆப்கானிஸ்தான் மீது படையெடுத்த அமெரிக்கா தற்போது அந்த நாட்டை அப்படியே விட்டுச் சென்றதையடுத்து அங்கு தலிபான்களின் ஆட்சி தலைத்தூக்கியுள்ளது.

அமெரிக்கப் படைகள் அங்கிருந்து நகர்ந்தவுடன் ஜூலை 28ம் தேதி தலிபான் குழு ஒன்று சீனா சென்று நட்புக்கரம் நீட்டியுள்ளது. இதனையடுத்து தலிபான்களே சீனாவின் புதிய நண்பர்கள் என்று அரசியல் வட்டாரங்கள் பேசத் தொடங்கியுள்ளன.

தென்கிழக்கு ஆசியாவில் தன்னை ஒரு பெரும் சக்தியாக உருவெடுக்க வைக்க சீனா பல யுக்திகளைக் கையாண்டு வருகிறது, அந்தப் பொறியில் சமீபத்தில் சிக்கியுள்ளவர்களே தலிபான்கள்.

இந்நிலையில் சீனாவின் தியாஞ்ஜினில் தலிபான்களுக்கும் சீன வெளியுறவு அமைச்சகத்துக்கும் இடையே நடந்த பேச்சு வார்த்தைக் குறித்த புகைப்படத்தை சீன வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ளது. இதில் சீன வெளியுறவு அமைச்சர் வாங் யி, மறைந்த தலிபான் நிறுவனர் முல்லா உமரின் சகாவான அப்துல் கனி பரதரும் இருக்கிறார்.

இன்னொரு புகைப்படத்தில் சீன வெளியுறவு அமைச்சக அதிகாரிகளுடன் ஒட்டுமொத்த தலிபான் குழுவும் இருக்கிறது.

இது நட்பு முறை சந்திப்பு மட்டுமே என்று இருதரப்பும் கூறினாலும் சீனாவின் வர்த்தக நோக்கங்களை விஸ்தரிக்கும் முயற்சியில் தலிபான்களுடன் கூட்டு சேரும் முயற்சி என்றே சர்வதேச ஊடகங்கள் கூறுகின்றன. தலிபான்களுக்கு அங்கீகாரம் அளிக்க சீனா அவசரம் காட்டுவதும் சீனாவின் உடனடியான நோக்கங்களை பறைசாற்றுவதாக உள்ளது.

அமெரிக்கப் படைகள் வெளியேறியதையடுத்து புத்துயிர் பெற்ற தலிபான்கள் தங்களுக்கு அங்கீகாரம் இருப்பதாகக் கூறிக்கொண்டு ஆப்கானிஸ்தானை தங்கள் வசம் கொண்டு வரும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறது.

ஏற்கெனவே ரஷ்யா, ஈரான் போன்ற நாடுகளுடன் தலிபான்கள் பேச்சு நடத்தியதும் உலக வளர்ந்த நாடுகளின் கவனத்தை ஈர்த்துள்ளது.

சீனாவுக்கு தலிபான்களின் மீதான புதிய பாசம் அதன் வர்த்தக நோக்கங்களுக்கு என்றே தெரிகிறது. ஆப்கானிஸ்தானில் 3 ட்ரில்லியன் டொலர்கள் மதிப்புள்ள கனிம வளங்கள் இருப்பதும் சீனாவின் நட்பு முயற்சியின் ஒரு முக்கிய நோக்கமாகும்.

2014 இல் அமெரிக்க நிலவியல் ஆய்வு வெளியிட்ட புள்ளி விவரங்களின்படி ஆப்கானில் 60 மில். டன் தாமிரம், 2.2 பில்லியன் தொன்கள் இரும்புத் தாது, 1.4 மில்லியன் தொன்கள் அரிதான சில கனிமங்கள் உள்ளன. மேலும் அலுமினியம், தங்கம், துத்தநாகம், வெள்ளி, பாதரசம் மற்றும் லிதியம் ஆப்கானில் கொட்டிக் கிடக்கின்றன.

ஏற்கெனவே சீன நிறுவனங்களின் கூட்டமைப்பு லோகார் பகுதியில் கனிம வளங்களை அகழத் தொடங்கி விட்டன. மேலும் எண்ணெயும் கிடைக்கிறதாம் இதற்கான உரிமத்தை சீன பெற்றோலிய கோர்ப்பரேஷன் பெற்றுள்ளது. 25 ஆண்டுகளுக்கு 3 எண்ணெய் வயல்களை அகழ ஒப்பந்தம் போடப்பட்டு விட்டது.

மேலும் சீனா-பாகிஸ்தான் பொருளாதார தாழ்வாரத்தை உருவாக்க சீனா 60 பில்லியன் டொலர்களை முதலீடு செய்துள்ளது, எனவே இதில் ஆப்கானிஸ்தான் முக்கிய அங்கம் வகிக்கும் என்று தெரிகிறது. போர் அல்ல பொருளாதாரமே ஆப்கான் தலிபான்களுடன் சீனாவின் தற்போதைய நட்புக்கரம் நமக்கு உணர்த்துவதாகும். ■


# புலமைச் சிகரம்

**ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி**

மாதிரிப் பரீட்சை
விடைத்தாள் - I

நேரம் - 45 நிமிடம்

**22.** 1) இவ்வுருவில் நிழற்றப்பட்ட பகுதியை தசம எண்ணாக எழுதுக.



........................................


2) $^1/_2, 0.6, ^4/_5, ^9/_{10}$ இவ்வெண்களில் மிகவும் சிறிய எண் யாது?

........................................

**23.** முற்பகல் 10.45 இற்குத் யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்ட பேருந்து ஒன்று 7 மணித்தியாலம் 30 நிமிடங்களில் கொழும்பைச் சென்றடைந்து பயணத்தை நிறுத்திக் கொண்டது. கொழும்பைச் சென்றடைந்த நேரத்தை இருபத்து நான்கு மணித்தியாலக் கடிகாரத்தில் காட்டும் விதத்தில் இலக்கங்களில் எழுதுக.

........................................

**24.**




1) இவ்வுருவின் மொத்தச் சுற்றளவினை சென்றிமீற்றரில் தருக?

........................................

2) AB இன் மொத்தப் பரப்பளவை சதுர சென்றிமீற்றரில் தருக?

........................................

**25.** பாத்திரமொன்றில் 5*l* பழரசம் ஊற்றலாம். அப்பாத்திரத்தில் 2*l* 450*ml* அளவு பழரசம் இடப்பட்டுள்ளது.

i) இப்பாத்திரத்தை நிரப்புவதற்கு இன்னும் தேவைப்படும் பழரசத்தின் அளவை மில்லிலீற்றரில் தருக?

........................................

ii) பாத்திரத்தில் தற்போதுள்ள பழரசத்தை ஒவ்வொன்றும் 350 மில்லி லீற்றர் கொள்ளளவுடைய போத்தல்களில் நிரப்ப எத்தனை போத்தல்கள் தேவை.

........................................

**26.** குறித்தவொரு கடையில் 1 கிலோகிராம் 200 கிராம் அரிசியை வாங்குவதற்கு சாயா ரூபா 204.00 பணத்தைச் செலுத்தினாள். அப்பணத்தினைச் செலுத்துவதற்கு மூன்று ரூ. 100 காசுத்தாள்களைக் கொடுத்தாள். அவளிடம் மேலும் ரூ. 4 இனை சில்லறையாகப் பெற்றுக் கொண்ட கடைக்காரர் மீதிப்பணத்தினை அவளிடம் கொடுத்தார்.

i) இக் கடையில் 1 கிலோகிராம் அரிசியின் விலை எத்தனை ரூபாய்?

........................................

ii) சாயா கடைக்காரனிடமிருந்து மீதியாகப் பெற்றுக் கொண்ட பணம் எத்தனை ரூபாய்?


........................................

**27.** உருவிலுள்ள தகவல்களை நன்கு அவதானித்து விடை தருக.
சிலாபத்திலிருந்து புத்தளத்தினூடாக அனுராதபுரம் வரையிலான தூரம் எத்தனை கிலோமீற்றர்?




........................................

- **உலகில் வாழும் பிராணிகள், நீரில் வாழ்பவை, நிலத்தில் வாழ்பவை நீரிலும் நிலத்திலும் வாழக்கூடியவை மாடுகள் ஆகியவற்றுக்கிடையே உள்ள தொடர்பை பின்வரும் உருவில் வகைகுறிக்கப்பட்டுள்ளது. அதனைக் கொண்டு 28, 29 ஆம் வினாக்களுக்குரிய விடையைத் தெரிவு செய்க.**




28. தரையில் வாழ்பவையைக் குறிக்கும் எழுத்து.
1) W 2) X 3) Y

29. Z இனால் வகைகுறிக்கப்படும் பிராணியாக அமையக்கூடியது
1) மீன் 2) கடற்குதிரை 3) ஆமை


30. ஜல்லிக்கட்டுப் போட்டியில் துள்ளிக்குதித்து ஓடிய காளைகளின் கொம்புகளினதும் கால்களினதும் மொத்த எண்ணிக்கை 168 ஆகும். அப்போட்டியில் கலந்து கொண்ட காளைகளின் எண்ணிக்கை யாது?
1)38 2) 28 3) 48

31. □ x ▲ = 65 ஆகும் ▲ - □ = 8 ஆகவும் இருப்பின் □ + ▲ இன் பெறுமானம் யாது?
1) 16 2) 17 3) 18

32. ★★★★ = ▲▲▲▲▲, ○○ = ★★★★ ஆகும். கீழே தரப்பட்டுள்ள எத்தொடர் சரியானதாகும்.
1) ★★★★★ = ▲▲▲▲○○
2) ○○○★ = ▲▲▲▲★★
3) ★★★★○ = ▲▲▲▲▲★★

33. 1999 ஆம் ஆண்டில் வெள்ளி விழாவைக் கொண்டாடிய இலங்கை வங்கி அதன் பொன்விழாவை கொண்டாடுவது எந்த நூற்றாண்டின் எந்த தசாப்தத்தில் ஆகும்.
1) 19 ஆம் நூற்றாண்டின் 6 ஆம் தசாப்தத்தில்
2) 21 ஆம் நூற்றாண்டின் 5 ஆம் தசாப்தத்தில்
3) 21 ஆம் நூற்றாண்டின் 3 ஆம் தசாப்தத்தில்

34. முகம் பார்க்கும் கண்ணாடியில் பார்க்கும் போது மாற்றமின்றித் தெரியும் உருவைத் தெரிவு செய்க.



(1) (2) (3)

ஈழநாடு

# கொரோனா மரணம் மேலும் உச்சமடையும்

## விசேட மருத்துவ நிபுணர்களின் எச்சரிக்கையை கவனத்தில் கொண்டுள்ளோம் என்கின்றது அரசு

கொழும்பு, ஓக. 05

**இலங்கையில் நாளாந்தக் கொரோனா மரணங்கள் மேலும் உச்சமடையும் என்று விசேட மருத்துவ நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.**

நாட்டில் இறுதியாக பதிவான கொரோனா மரணங்களின் எண்ணிக்கை இந்த ஆபத்து நிலையை எடுத்துக் காட்டுகின்றது என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்நிலையில், விசேட மருத்துவ நிபுணர்களின் இந்த எச்சரிக்கையைக் கவனத்தில் கொண்டுள்ளோம் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவ நிபுணர் அசேல குணவர்தன தெரிவித்தார்.

தொற்றாளர்களின் வீதம் அதிகரிப்பதால் மரணங்களும் உயர்வடைகின்றன என்றும் அவர் கூறினார்.

இந்த ஆபத்தான நிலையை எதிர்கொள்ள அனைவரும் பொறுப்புணர்வுடன் செயற்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

இலங்கையில் கடந்த திங்கட்கிழமை 74 கொரோனாத் தொற்றாளர்கள் உயிரிழந்தனர். இவ்வாறு உயிரிழந்தவர்களில் 48 ஆண்களும், 26 பெண்களும் அடங்குகின்றனர்.



இதற்கமைய நாட்டில் பதிவாகியுள்ள கொரோனா மரணங்களின் எண்ணிக்கை 4 ஆயிரத்து 645 ஆக அதிகரித்துள்ளது என்றும் அரச தகவல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (இ)

## இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தில் மேலும் மூவருக்குத் தொற்று

கொழும்பு, ஓக. 05

இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தில் மேலும் மூவருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிபடுத்தப்பட்டுள்ளது எனக் குறித்த நிறுவனத்தின் உயர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தில் தொடர்ச்சியாகத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டு வருகின்றனர் என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் தலைமையகத்திலும், கொழும்பு ஆர். பிரேமதாஸ விளையாட்டு மைதானத்திலும் இதுவரை 20 தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் என்றும் குறித்த அதிகாரி மேலும் கூறியுள்ளார். (இ)

# மற்றுமொரு கொரோனா அலை உருவாகியுள்ளதா?

## பாராளுமன்றத்தில் சஜித் கேள்வி



கொழும்பு, ஓக. 05

“நாட்டில் கடந்த சில வாரங்களாகக் கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை மற்றும் மரணங்களின் எண்ணிக்கையில் திடீரென ஏற்பட்டுள்ள அதிகரிப்பானது நாட்டில் மற்றுமொரு கொரோனா அலை உருவாகியுள்ளதையே காட்டுகின்றது என்பதை அரசு ஏற்றுக்கொள்கின்றதா?”

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கேள்வி எழுப்பினார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றும்போதே இவ்வாறு கேள்வியெழுப்பிய அவர் மேலும் குறிப்பிடுகையில்,

“கடந்த சில வாரங்களாகத் திடீரென நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல் தீவிரமடைந்துள்ளதுடன், தொற்றாளர்களின் எண்ணிக்கையும் மரணிப்போரின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது.

இது தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையாக உள்ளது. இதனால் இது தொடர்பில் எழுப்பப்படும் கேள்விகளுக்கு அரசு பதிலளிக்க வேண்டும்.

கடந்த சில வாரங்களில் அதிகரித்துள்ள கொரோனாத் தொற்றாளர் எண்ணிக்கை மற்றும் மரணங்களின் எண்ணிக்கைக்கமைய, நாட்டில் மேலும் ஒரு கொரோனா அலை உருவாகி வருகின்றது என்பதை அரசு ஏற்றுக்கொள்கின்றதா?

கடந்த 10 நாட்களில் பதிவான கொரோனாத் தொற்றாளர் எண்ணிக்கை, மரணங்களின் எண்ணிக்கை, செய்யப்பட்ட பி.சி. ஆர். பரிசோதனைகளின் எண்ணிக்கை மற்றும் தற்போது சிகிச்சை பெற்றுவரும் தொற்றாளர்களின் எண்ணிக்கையை அரசு வெளியிடுமா?

இதேவேளை, உலகம் முழுவதும் தற்போது அடையாளம் காணப்பட்டுள்ள கொரோனா வைரஸ் திரிபுகள் என்ன?

அவற்றில் நாட்டில் பதிவாகியுள்ள திரிபுகள் எவை? தற்போது நாட்டில் வழங்கப்படும் தடுப்பூசிகள் குறித்த திரிபுகளை எதிர்கொள்ளக் கூடியனவா?

மேலும், ஒரு கொரோனா அலை உருவாகி வரும் நிலையில் கொரோனாத் தடுப்பு நடவடிக்கைகளுக்கான ஒழுங்குவிதிகளைத் தளர்த்துவது பொருத்தமானதா? சகல அரச ஊழியர்களும் பணிகளுக்கு அழைக்கப்பட்டுள்ள நிலையில் கொரோனாப் பரவல் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட வேண்டிய தொற்றா நோயுடன் தொடர்புடையவர்கள் மற்றும் கர்ப்பிணிகள் மற்றும் சிறிய பிள்ளைகள் உள்ள உத்தியோகத்தர்கள் அந்த ஆபத்துக்குள் தள்ளப்பட மாட்டார்களா?

இதேவேளை, சுகாதாரத் துறையிடம் உள்ள தீவிர சிகிச்சைப் பிரிவு கட்டில்களின் எண்ணிக்கை, ஒட்சிசன், பரிசோதனை அளவு, சுகாதாரப் பணியாளர்களின் அளவு எவ்வளவு, இவை எதிர்காலத்தில் கொரோனா அலை ஏற்பட்டால் அதனைத் தடுக்கப்போதுமானதா?

அத்துடன் தற்போது கொரோனாத் தொற்றுக்கு உள்ளான சிறுவர்களின் எண்ணிக்கையிலும் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

அதேவேளை, தொற்றால் சிறுவர்களும் உயிரிழந்துள்ளனர். இது தொடர்பான புள்ளி விபரங்களைச் சமர்ப்பிப்பீர்களா?” - என்று அவர் கேள்வி எழுப்பினார்.

இந்தக் கேள்விகளுக்குப் பதிலளிக்க இன்று 5ஆம் திகதி வரை சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாரச்சி கால அவகாசம் கோரினார். (இ)

## தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய மேலும் 113 பேர் கைது

கொழும்பு, ஓக. 05

நாட்டில் தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 113 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இதற்கமைவாக தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் இதுவரை கைதுசெய்யப்பட்டோரின் எண்ணிக்கை 53 ஆயிரத்து 143ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, மேல் மாகாணத்துக்கு உள்நுழையும் வெளியேறும் 13 பிரதேசங்களில் 5 ஆயிரத்து 494 பேர் நேற்றுமுன்தினம் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.



இவர்களில் தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிப் பயணித்த குற்றச்சாட்டில் 53 வாகனங்களில் பயணித்த 133 பேர் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். (இ)

## முன்னிலை சோசலிச கட்சியின் செயலாளர் உட்பட இருவர் கைது!

கொழும்பு, ஓக. 05

முன்னிலை சோசலிசக் கட்சியின் நிர்வாகச் செயலாளர் சமீர கொஸ்வத்த மற்றும் அக்கட்சியின் உறுப்பினர் ஒருவர் பொலிஸாரால் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் பாராளுமன்ற நுழைவாயில் பகுதியில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் போது, அரச சொத்துக்களுக்குச் சேதம் விளைவித்தமை, வன்முறையில் ஈடுபட்டமை மற்றும் மஹரகம பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியைத் தாக்கியமை போன்ற குற்றச்சாட்டுகளின்கீழ் இருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.



இந்த ஆர்ப்பாட்டத்தின்போது காயமடைந்த மஹரகம பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, தற்போது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார். (இ)

# பொது சுகாதார பரிசோதகர் மீது உமிழ்ந்த கொரோனா தொற்றாளரின் தந்தை கைது!

கொழும்பு, ஓக. 05

குருநாகல் மாவட்டம், கிரிவுல்ல - புஸ்கொலதெனிய பிரதேசத்தில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஒருவரைத் தாக்கி அவர் மீது உமிழ்ந்த கொரோனாத் தொற்றாளர் ஒருவரின் தந்தை கைதுசெய்யப்பட்டுள்ளார். பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண இதனைத் தெரிவித்துள்ளார்.

கொரோனா நோயாளர் ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ளார் என்று கிடைக்கப் பெற்ற தகவலையடுத்து, குறித்த பகுதியில் உள்ள வீடொன்றுக்கு நாரம்மல சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கடமையாற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோகர் பணிக்காகச் சென்றுள்ளார்.

குறித்த சந்தர்ப்பத்தில் அந்த வீட்டில் இருந்த கொரோனா நோயாளர் எனச் சந்தேகிக்கப்படும் நபரின் 48 வயதுடைய தந்தை, பொதுச் சுகாதாரப் பரிசோதகரின் கடமைக்கு இடையூறு விளைவித்துள்ளதுடன் அவரைத் தாக்கி அவர் மீது உமிழ்ந்துள்ளார்.

இது தொடர்பில் அளிக்கப்பட்ட முறைப்பாட்டையடுத்து பொலிஸார் அவரைக் கைதுசெய்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

சம்பவ தினத்தன்று குறித்த நபர் மது போதையில் இருந்துள்ளமை முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் கூறியுள்ளார். (இ)



## செக் குடியரசில் ரயில்கள் மோதல்: இருவர் உயிரிழப்பு; 50 பேர் காயம்!

பிராகா, ஓக. 05

செக் குடியரசில் இரு ரயில்கள் மோதிய விபத்தில் இருவர் உயிரிழந்தனர். 50 பேர் வரை காயமடைந்துள்ளனர்.

ஜேர்மனி எல்லையில் இருந்து 10 மைல் தொலைவில் அமைந்துள்ள மிலாவ்ஸ் கிராமத்திற்கு அருகே உள்ளூர் நேரப்படி நேற்று புதன்கிழமை காலை 8 மணிக்கு இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்தையடுத்து அயல் நாடான ஜேர்மனியிலிருந்து மீட்பு குழுக்கள் சென்று காயமடைந்தவர்களை மருத்துவமனையில் சேர்ப்பித்தன.

காயமடைந்தவர்களில் ஏழு பேரின் நிலைமை கவலைக்கிடமாகவுள்ளதாக அதிகாரிகள் கூறினர். (ஐ)

## ஜேர்மனி வெள்ள உயிரிழப்புகளை கொலைகளாக விசாரிக்க முஸ்தீபு!

பேர்லின், ஓக. 05

ஜேர்மனியில் ஏற்பட்ட மோசமான வெள்ள அனர்த்தத்தில் நிகழ்ந்த உயிரிழப்புகளுக்கு அதிகாரிகளின் அலட்சியம் காரணமா என்பது குறித்து விசாரிப்பதற்கான அடிப்படைகளை அந்த நாட்டின் சட்டவாளர்கள் ஆராய்ந்து வருகின்றனர்.

ஜூலை மாதம் மேற்கு ஜேர்மனியில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் சிக்கி குறைந்தது 180 பேர் உயிரிழந்தனர். பரந்த அளவில் ஏற்பட்ட பேரழிவை அதிகாரிகள் முன் கூட்டியே மக்களை எச்சரிப்பதற்குத் தவறிவிட்டனரா என்ற கேள்விகளை எழுப்பத் தூண்டியுள்ளன.

அரச மற்றும் மாநில அரசுகளின் அதிகாரிகள் இது தொடர்பான விமர்சனங்களுக்கு முகம்கொடுக்க நேர்ந்துள்ளது.

வெள்ள உயிரிழப்புக்களைக் கவனக் குறைவான சூழ்நிலைகளில் நிகழ்ந்த கொலைகள், உடல் பாதிப்புகள் என்ற வகையில் விசாரிப்பதற்கான அடிப்படைகளை ஆராய்து வருகின்ற சட்டவாளர்கள் முன்னெச்சரிக்கைகளை வழங்கி மக்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்துவதில் காட்டப்பட்ட அலட்சியம், பொறுப்பின்மை காரணமாக கொலைக்கு நிகரான சூழ்நிலைகளில்

நிகழ்ந்த மரணங்களாக அவற்றை விசாரிப்பதற்கு வாய்ப்புள்ளது.

வெள்ள நெருக்கடியைக் கையாண்ட முறைகளை நியாயப்படுத்தி உள்ளஜேர்மனியின் வானிலை அவதான சேவை நிலையம் மழை தொடர்பாகத் தன்னால் விடுக்கப்பட்ட எதிர்வு கூறும் எச்சரிக்கைகளை உள்ளூர் அதிகாரிகள் உரிய நேரத்தில் மக்களிடம் சேர்ப்பிக்க வில்லை என்று குற்றம்சாட்டியுள்ளது. (ஐ)



## அகதிகள், புகலிடம் கோருவோருக்கு தடுப்பூசி செலுத்த பிரான்ஸ் ஏற்பாடு!

பாரிஸ், ஓக. 05

அகதிகள், புகலிடம் கோருவோர் மற்றும் தொழில் நிமித்தம் தங்கியுள்ள குடியேறிகளுக்கு தடுப்பூசி ஏற்றுவதை விரைவாக முன்னெடுக்குமாறு சுகாதார அதிகாரிகளுக்கு பிரான்ஸ் அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

நாட்டின் சாதாரண மக்கள் தொகையினருடன் ஒப்பிடுகையில் வெளிநாட்டு அகதிகள் மற்றும் புகலிடம் கோருவோரிடையே தடுப்பூசி ஏற்றியோரின் வீதம் குறைவாக இருப்பது தெரியவந்துள்ளது. இதையடுத்தே அவர்களுக்கு ஊசி ஏற்றும் பணிகளை விரைவாக இந்த மாத இறுதிக்குள் நிறைவு செய்யுமாறு அதிகாரிகள் கேட்கப்பட்டுள்ளனர்.

குடியேறிகள் தங்கியுள்ள இடங்களிலும் அகதிகளை வரவேற்கின்ற நிலையங்களிலும் உள்ளவர்களுக்கு நடமாடும் தடுப்பூசி வசதிகள் மூலம் ஊசி ஏற்றும் பணியை துரிதப்படுத்துமாறு குடியுரிமைகளுக்கான அமைச்சர் மார்லின் ஷியப்பா பொலிஸாருக்கும் பிராந்தியங்களின் சுகாதார பணிப்பாளர்களுக்கும் உத்தரவிட்டுள்ளார்.

அகதிகள் மற்றும் புகலிடக் கோரிக்கையாளர்களுக்குத் தடுப்பூசி ஏற்றுவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு பிரான்ஸின் குடிவரவு மற்றும் அகதிகள் ஒருமைப்பாட்டு அலுவலகத்துக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. (ஐ)

## ஆப்கானிஸ்தானில் தீவிரவாதிகள் தொடர் குண்டுவெடிப்பு தாக்குதல்!



காபூல், ஓக. 05

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் தீவிரவாதிகள் சக்தி வாய்ந்த தொடர் குண்டு வெடிப்புகளை நடத்தினர்.

இதுகுறித்து ஆப்கான் ஊடகங்கள் வெளியிட்ட செய்திகளில் "ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் செவ்வாய்க் கிழமை இரவு தீவிரவாதிகள் சக்திவாய்ந்த தொடர் குண்டு வெடிப்புகளை நடத்தினர். இந்த குண்டுவெடிப்புகள் அங்கு அமைந்துள்ள வெளிநாட்டுத் தூதரகங்களைக் குறிவைத்து நடத்தப்பட்டதா? என்று அதிகாரிகள் விசாரணையில் ஈடுபட்டு வருகின்றனர்.

"இந்த குண்டுவெடிப்பில் பலர் காயமடைந்தனர். உயிரிழப்பு பற்றி விவரம் எதுவும் இல்லை. பல இடங்களில் தீவிரவாதிகள் துப்பாக்கிச் சூட்டையும் நடத்தினர். தற்போது காபூலில் நிலைமை கட்டுக்குள் இருப்பதாக ஆப்கானிஸ்தான் உள்துறை அமைச்சர் பிஸ்மில்லா கான் தெரிவித்துள்ளார்" என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் இந்தத் தாக்குதலுக்கு இதுவரை எந்த தீவிரவாத அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. (ஐ)



## 20 கோடியை கடந்தது கொரோனா தொற்று!

நியூயோர்க், ஓக. 05

உலகம் முழுவதும் கொரோனா தொற்றுக்கு உள்ளானோரின் எண்ணிக்கை 20 கோடியை கடந்துள்ளது. இதன்படி, 20 கோடியே 2 இலட்சத்து 34 ஆயிரத்து 964 பேர் நேற்று வரை தொற்றுக்கு இலக்காகியுள்ளனர்.

இதனிடையே தொற்றிலிருந்து 18 கோடியே 5 இலட்சத்து 3 ஆயிரத்து 977 பேர் குணமடைந்துள்ளனர். இதே சமயம் 42 இலட்சத்து 58 ஆயிரத்து 448 பேர் தொற்றால் உயிரிழந்தனர்.

கொரோனா தொற்றுக்கு தற்போது ஒரு கோடியே 54 இலட்சத்து 72 ஆயிரத்து 539 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். சிகிச்சை பெறுபவர்களில் 92 ஆயிரத்து 417 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

## கொரோனா தாக்கிய இரு வாரத்தில் மாரடைப்பு ஏற்படும் ஆபத்து அதிகம்!

### ஆய்வில் புதிய தகவல்

கொரோனா தொற்றுக்கு ஒருவர் இலக்கான முதல் இரு வாரங்களில் மாரடைப்பு, பக்கவாதம் ஏற்படும் அபாயம் அதிகரித்துள்ளது என்று சுவீடனின் தி லான்செற் பத்திரிகை தெரிவித்துள்ளது.

சுவீடனின் உமேயா பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சியாளர் ஒஸ்வால்டோ பொன்சேகா ரோட்ரிக்ஸ் கூறும்போது, "கொரோனா வைரஸ் தொற்று தாக்கிய, முதல் இரு வாரங்களில் மாரடைப்பும், பக்கவாதமும் ஏற்படும் ஆபத்து 3 மடங்கு அதிகரித்து இருப்பதை நாங்கள் கண்டறிந்துள்ளோம்" என்றார்.

மற்றோர் ஆராய்ச்சியாளரான காட்சூலாரிஸ், "கொரோனாவுக்கு எதிராக தடுப்பூசி போடுவது எவ்வளவு முக்கியம் என்பதை எங்கள் முடிவுகள் காட்டுகின்றன. குறிப்பாக கடுமையான இதய பாதிப்பு ஆபத்தில் இருக்கிற முதியவர்கள் தடுப்பூசி போடுவது முக்கியம்", என்று தெரிவித்துள்ளார். (ஐ)

## 'யூ ரியூப் ஷோர்ட்ஸ்' செயலி மூலம் மாதம் 19 இலட்சம் ரூபாய் ஈட்டலாம்!

நியூயோர்க், ஓக. 05

"ஷோர்ட்ஸ்" செயலியில் காணொலி வெளியிட்டால் மாதம் 10 ஆயிரம் டொலர்கள் - நம் நாட்டு மதிப்பில் 19 இலட்சம் ரூபாய் வரை ஈட்ட முடியும் என்று யூ ரியூப் நிர்வாகம் அறிவித்துள்ளது.

யூ-ரியூப்பின் "ஷோர்ட்ஸ்" காணொலிகள் பிரபலமானவை. 30 செக்கன்கள் கொண்ட காணொலியையே இதில் பதிவிட முடியும்.

தற்போது யூ ரியூப் ஷோர்ட்ஸ் செயலி தனியாக இயங்கி வருகின்றது. இதில் காணொலிகளை வெளியிட்டு அதிக பார்வைகளை பெற்றால் மாதம் நம் நாட்டு மதிப்பில் 19 இலட்சம் ரூபாய் வரை ஒருவரால் ஈட்ட முடியும் என்று யூ ரியூப் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

அத்துடன், 2021-2022 ஆம் ஆண்டிற்கு 10 கோடி டொலர்களை "ஷோர்ட்ஸ்" செயலிக்காக யூ ரியூப் நிர்வாகம் ஒதுக்கியுள்ளது. இதில் மாதம் அதிக பார்வையாளர்களை ஈர்த்த ஆயிரம் திறமையாளர்களைத் தெரிவு செய்து அவர்களின் காணொலி எத்தனை முறை பார்க்கப்பட்டுள்ளது என்ற அடிப் படையில் இலங்கை மதிப்பில் 2 இலட்சம் ரூபாய் தொடக்கம் 19 இலட்சம் ரூபாய் வரை வழங்கப்படவுள்ளது என்று யூ ரியூப்பின் தலைமை வர்த்தக நிர்வாகி ரொபேர்ட் கின் தெரிவித்திருக்கிறார்.

மேலும், படைப்பாளர்கள் வெளியிடும் காணொலிகளை காண மாதம் ஒரு தொகை வைத்து பார்வையாளர்களை தங்கள் கணக்கை பின் தொடரச் செய்வதன் மூலம் வருவாயை ஈட்டிக் கொள்ளலாம் என்றும் "சுப்பர் ஷொட் " என்ற அமைப்பின் தங்களின் பார்வையாளர்களிடம் நேரடியாக பேசுவதன் மூலமும் வருவாயை பெருக்கலாம் என்றும் தெரிவித்திருக்கிறார். (ஐ)



## மல்யுத்தத்தில் முதல் தங்கம் கறுப்பின பெண் வென்றார்!

ரோக்கியோ, ஒக. 05

ஒலிம்பிக் மல்யுத்தத்தில் அமெரிக்க கறுப்பின பெண்ணான தமிரா மென்சா ஸ்டாக் தங்கப் பதக்கம் வென்றுள்ளார். அமெரிக்க கறுப்பின பெண் ஒருவர் மல்யுத்தப் போட்டியில் தங்கம் வெல்வது ஒலிம்பிக் வரலாற்றில் இதுவே முதன்முறையாகும்.

அவர் நேற்று முன்தினம் நடந்த 68 கிலோ எடைப் பிரிவில் ப்றீஸ்ரைல் மல்யுத்தத்தில் தங்கப் பதக்கம் வென்றுள்ளார்.

நைஜீரியாவின் பிளஸிக் ஒபோருடுடுவை 4-1 என்ற கணக்கில் தோற்கடித்து அவர் இந்த வெற்றியை பதிவு செய்துள்ளார். (ஐ)



## பெண்களுக்கான 200மீற்றர் ஓட்டம்: ஜமேக்காவின் ஹெராவுக்கு தங்கம்!

ரோக்கியோ, ஒக. 05

பெண்களுக்கான 200 மீற்றர் ஓட்டப் போட்டியில் ஜமேக்காக வீராங்கனை தாம்சன் ஹெரா தங்கப் பதக்கம் வென்றார்.

டோக்கியோ ஒலிம்பிக்கில் நேற்று பெண்களுக்கான 200 மீற்றர் ஓட்டப் பந்தயம் நடைபெற்றது.

இதில் ஜமேக்கா வீராங்கனை எலைன் தாம்சன் ஹெரா பந்தய தூரத்தை 21:53 செக்கன்களில் கடந்து முதலிடம் பிடித்தார்.

நமீபியா வீராங்கனை கிறிஸ்ரைன் 21:81 செக்கன்களில் கடந்து வெள்ளிப் பதக்கத்தையும், அமெரிக்க வீராங்கனை கேப்ரியல் 21:87 செக்கன்களில் கடந்து வெண்கலப் பதக்கமும் வென்றனர். (ஐ)

# அவுஸ்திரேலியாவை வீழ்த்தி பங்களாதேஷ் வரலாற்று வெற்றி!

டாக்கா, ஒக. 05

இருபது - 20 கிரிக்கெட் போட்டியில் அவுஸ்திரேலியாவை முதன்முறையாக வென்று வரலாற்று வெற்றியைப் பெற்றது பங்களாதேஷ் அணி.

அவுஸ்திரேலிய அணி இருபது - 20இன் 5 போட்டி கள் கொண்ட தொடரில் பங்கேற்பதற்காக பங்களாதேஷ் சென்றுள்ளது.

நேற்று முன்தினம் டாக்காவில் நடந்த போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலிய அணி களத் தடுப்பைத் தெரிவு செய்யதது.

தொடக்க வீரர்களில் ஒருவரான சௌம்ய சர்கார் 2 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். ஆனால், மற்றைய தொடக்க வீரரான முஹமட் நயீம் 30, சகீப் அல்ஹசன் 36 ஓட்டங்களைப் பெற்றனர்.

பின்னர் வந்த மஹ்மதுல்லா 20, அபிப் ஹூசைன் 23 ஓட்டங்களைப் பெறவே, 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்கள் இழப்புக்கு 131 ஓட்டங்களை அந்த அணி பெற்றது.

அவுஸ்திரேலியாவின் பந்துவீச்சில், ஜோஸ் ஹசல் வூட் 3 விக்கெட்களையும், மிற்செல் ஸ்ராக் 2 விக்கெட்களையும் அதிகபட்சமாக வீழ்த்தினர்.



பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணிக்கு தொடக்கம் கொடுத்த அலெக்ஸ் ஹாரி முதல் பந்திலேயே ஆட்டமிழந்தார்.

மிற்செல் மார்ஸ் போராடி 45 ஓட்டங்களை சேர்த்த போதும் ஏனைய வீரர்கள் ஒத்துழைக்கவில்லை. 20 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்களையும் இழந்து 108 ஓட்டங்களையே அவுஸ்திரேலியா பெற்றது.

இதன்மூலம் 23 ஓட்டங்களால் அவுஸ்திரேலியா தோல்வியடைந்தது.

பங்களாதேஷின் பந்துவீச்சில் நசூம் அஹமட் 4 விக்கெட்களையும், முஸ்தபீர் ரஹ்மான், சொரிபுல் இஸ்லாம் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்களையும் அதிகபட்சமாக வீழ்த்தினர்.

போட்டியின் நாயகனாக நசூம் அஹமட் தெரிவானார். (ஐ)

# தாயக மண்ணில் பிராவோ இனி விளையாடமாட்டார்!

கயானா, ஒக. 05

மேற்கிந்தியத் தீவுகளின் சகலதுறை வீரரான டுவைன் பிராவோ இனி தாயகத்தில் சர்வ தேச போட்டிகளில் விளையாட மாட்டார் என்று அறிவித்துள்ளார்.

பாகிஸ்தானுக்கு எதிராக நேற்று மழையால் கைவிடப்பட்ட நான் காவது இருபது -20 போட்டியே அவரின் இறுதிப் போட்டியாக அமைந்தது.

எனினும், எதிர்வரும் நவம்பரில் தொடங்கவுள்ள இருபது - 20 உலகக் கிண்ணத் தொடருடன் பிராவோ சர்வதேச போட்டிகளிலிருந்து ஓய்வுபெறவுள்ளார்.

பிராவோ மேற்கிந்தியத் தீவுகள் அணிக்காக 85 இருபது - 20 போட்டிகளில் விளையாடி 76 விக்கெட்களை கைப்பற்றியுள்ளார். அத்துடன், 1,229 ஓட்டங்களையும் எடுத்துள்ளார். இதேபோன்று, 164 ஒருநாள் போட்டிகளில் 2,968 ஓட் டங்களையும் 199 விக்கெட்களையும், 40 டெஸ்ட் போட்டிகளில் 2,200 ஓட்டங்களையும் 86 விக்கெட்களையும் வீழ்த்தியுள்ளார்.



இதேவேளை, இறுதிப் போட்டி மழையால் கைவிடப்பட்ட நிலையில் பாகிஸ்தான் அணி தொடரை 1 - 0 என்ற கணக்கில் வெற்றி பெற்றுள்ளது. (ஐ)

# 400 மீ. தடை தாண்டல் போட்டியில் உலக சாதனை படைத்தார் சிட்னி!

ரோக்கியோ, ஒக. 05

அமெரிக்காவின் சிட்னி மைக் லாக்லின் 400 மீற்றர் தடை தாண்டல் போட்டியில் உலக சாதனையுடன் தங்கப் பதக்கம் வென்றார்.

ரோக்கியோவில் நடக்கும் ஒலிம் பிக் போட்டியில் நேற்று 400 மீற்றர் தடை தாண்டல் ஓட்டம் நடந்தது.

இதில் அமெரிக்காவின் சிட்னி மைக்லாக்லின் 51:46 செக்கன்களில் பந்தய தூரத்தைக் கடந்தது புதிய உலக சாதனை படைத்ததுடன், தங்கப் பதக்கத்தையும் வென்றார்.

இதன்மூலம் சிட்னி, தனது சொந்த நாட்டவரான டலிலா முஹமது ரியோ ஒலிம்பிக்கில் ஏற்படுத்திய 51:90 செக்கன்கள் என்ற சாதனையை முறியடித்தார்.

இந்தப் போட்டியில் பங்கேற்ற முன்னாள் சாதனையாளரான டலிலா முஹமது வெள்ளிப் பதக்கம் வென்றார். பெம்கே போல் வெண்கலப் பதக்கம் வென்றார். (ஐ)






## பதக்க பட்டியலில் சீனா முதலிடம்!

ரோக்கியோ, ஒக. 03

ரோக்கியோவில் நடக்கும் ஒலிம்பிக் போட்டியில் 32 தங்கப் பதக்கங்களுடன் சீனா முதலிடத்தைப் பிடித்துள்ளது. பதக்கங்களின் எண்ணிக்கை அடிப்படையில் 77 பதக்கங்களை வென்று அமெரிக்கா முன்னிலையில் உள்ளது.

நேற்று மாலை 5 மணி வரையான நிலைவரப்படி, சீனா, 32 தங்கம், 21 வெள்ளி, 16 வெண்கலங்களுடன் 69 பதக்கங்களுடன் முதலிடத்தில் உள்ளது.

அமெரிக்கா 25 தங்கம், 30 வெள்ளி, 22 வெண்கலங்களுடன் 77 பதக்கங்களை வென்று இரண்டாவது இடத்திலும், ஜப்பான் 20 தங்கம், 7 வெள்ளி, 12 வெண்கலங்களுடன் 39 பதக்கங்களுடன் மூன்றாவது இடத்திலும் உள்ளன. நேற்று வரை இலங்கை எந்தப் பதக்கத்தையும் வெல்லவில்லை. (ஐ)

# சிறைச்சாலையில் அவசர செயலணி உருவாக்கம்!

## இராணுவத்திலிருந்து விலகிய 500 பேரை இணைக்க நடவடிக்கை

**கொழும்பு, ஓக.05**

**“சிறைச்சாலைகள் திணைக்களத்தில் 2 ஆயிரத்து 305 பதவி வெற்றிடங்கள் நிலவுகின்றன. அதற்கான நியமனங்களை வழங்க சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் நடவடிக்கைகளை எடுத்துள்ளார். அதேவேளை, சிறைச்சாலையில் அவசர செயலணியும் உருவாக்கப்பட்டுள்ளது. இந்தச் செயலணிக்கு இராணுவத்திலிருந்து விலகியுள்ள 500 பேரை இணைத்துக்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.”**



- இவ்வாறு நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினா நேரத்தின்போது ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி. சமிந்த விஜேசிறி எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே மேற்கண்டவாறு கூறிய நீதி அமைச்சர் அலி சப்ரி, மேலும் தெரிவித்ததாவது:-

“சிறைச்சாலைகள் பாதுகாப்பு அலுவலகர்களாக 7 ஆயிரத்து 762 அதிகாரிகள் உள்ளனர். ஆனால், 5 ஆயிரத்து 567 பேரே தற்போது சேவையில் உள்ளனர். 2 ஆயிரத்து 305 பதவி வெற்றிடங்கள் சிறைச்சாலைகள் திணைக்களத்தில் நிலவுகின்றன. சிறைச்சாலைகள் திணைக்களத்தில் காணப்படும் பதவி வெற்றிடங்களுக்கான நியமனங்களை வழங்குவதற்கான நடவடிக்கைகள் கட்டம் கட்டமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக உள்ள கைதிகள் அதிவிசேட பாதுகாப்பு பூஸா சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். பூஸா, அங்குனுகொல மற்றும் கொழும்பு சிறைச்சாலைகளுக்கு விசேட அதிரடிப்படையின் பாதுகாப்பும் வழங்கப்பட்டுள்ளது.

பூஸா, அங்குனுகொல மற்றும் கொழும்பு சிறைச்சாலைகளில் தொலைபேசி பாவனையும் தடைசெய்யப்பட்டுள்ளது. அதிகாரிகள் உரிய வகையில் பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர்.

சிறைச்சாலைகள் புலனாய்வு பிரிவு மறுசீரமைக்கப்பட்டுள்ளதுடன், சிறைச்சாலைகளில் செயல்படும் அவசர செயலணியும் உருவாக்கப்பட்டுள்ளது. இந்தச் செயலணிக்கு இராணுவத்திலிருந்து விலகியுள்ள 500 பேரை இணைத்துக்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன” - என்றார். (இ)

# ஹிஷாலினியை வேலைக்கு அனுப்பிய அவரின் பெற்றோரும் தப்பிவிட முடியாது

## டயனா கமகே எம்.பி. சுட்டிக்காட்டு

கொழும்பு, ஓக. 05

“ஹிஷாலினி பணிக்கு அமர்த்தப்படும் வயதில் இல்லை என்பது தெரிந்தும் அந்தச் சிறுமியை பணிக்கு அனுப்பியது மிகப்பெரிய குற்றம். எனவே அவ்வாறு பணிக்கு அனுப்பிய ஹிஷாலினியின் பெற்றோரும் தண்டனையிலிருந்து தப்பிக்க முடியாது.”

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினரும் அரசு தரப்பு ஆதரவாளருமான டயனா கமகே தெரிவித்தார்.

“ரிஷாத் பதியுதீன் மீது இன்று மரியாதை இல்லை. எவ்வாறு இனியும் அவர் மக்கள் பிரதிநிதியாக இருக்க முடியும்? அவர் எவ்வாறு இன்னொரு பிள்ளைக்காக, பெற்றோருக்காகப் பேச முடியும்?” என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

“ரிஷாத் பதியுதீனுக்கும் பிள்ளைகள் உள்ளன. அவர்களுக்குப் பெற்றோர்கள் என்ற உணர்வு இல்லையா? அவர்களின் வீட்டில் இவ்வாறான குற்றங்கள் இடம்பெறுகின்றது என்பது தெரிந்துகொண்டும் எப்படி அவரால் இருக்க முடிந்தது? ஹிஷாலினியின் மரணத்துக்கு அவரின் பெற்றோர், ரிஷாத் பதியுதீன் ஆகியோர் பொறுப்புக்கூறியாக வேண்டும்” என்றும் அவர் வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் உரையாற்றும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“சிறுவர் வன்கொடுமைகள் நிறுத்தப்படும் ஆண்டாக இந்த ஆண்டு உள்ள நிலையில் இலங்கையில் சிறுவர் துஷ்பிரயோகம், சிறுவர்களைப் பணிக்கு அமர்த்துதல் என்பவை பேரலையாக இலங்கையைத் தாக்கிக்கொண்டுள்ளது. இதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை ஜனாதிபதி முன்னெடுத்து வருகின்றார்.

சிறுமி ஹிஷாலினியின் மரணம் குறித்த விசாரணைகள் அடுத்த இரண்டு வாரங்களில் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு உண்மைகளை கண்டறிந்து குற்றவாளிகளைத் தண்டிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதேவேளை, சிறுவர் துஷ்பிரயோகத்தில் ஈடுபடும் குற்றவாளிகளைப் கறுப்புப்பட்டியலில் போடும் முறைமையொன்று உருவாக வேண்டும். மனநோயாளர் பட்டியலில் அவர்களை இணைக்க வேண்டும். தமது பிள்ளைகளிடம் கூட அவர்கள் செல்ல முடியாத சட்டமொன்று கொண்டுவர வேண்டும். வெளிநாடுகளில் இந்தச் சட்டம் நடைமுறையில் உள்ளது” - என்றார். (இ)

## மரண அறிவித்தல்

மலர்வு 14 - 04 - 1980



உதிர்வு 04 - 08 - 2021

### மரியதாசன் ஹெனான்மார்க்ஸ் (யூலின்)

(நாவாந்துறை- யாழ்ப்பாணம்)

நாவாந்துறையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மரியதாசன் ஹெனான்மார்க்ஸ் (யூலின்) 04.08.2021 புதன்கிழமை இன்று காலமானார்.

அன்னார் பிறிண்சியின் அன்புக் கணவரும், ஜெய்டனின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற செபஸ்தியாம்பிள்ளை – காணிக்கைமேரி மற்றும் பத்திநாதர் – உத்தரியத்தின் அன்புப் பேரனும், மரியதாஸ் – சின்னக்கிளி ஆகியோரின் பாசமிகு மகனும், தறுமுசாந்தா ஆகியோரின் அன்பு மருமகனும், கொலின் (பிரான்ஸ்), வலன்டன் (பிரான்ஸ்), விஜியனிதா, லீயோனிஸ் (அருட்தந்தை), அஜந்தன் (பிரான்ஸ்), சுபன், கில்டா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், கொன்சி, ஜோய், உசாந்தன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், S.K.M.E நிறுவன எட்வட், அன்ரன், யோன்மேரி, சூசைதாசன், அமலதாசன் ஆகியோரின் பாசமிகு பெறாமகனும், எட்வினம்மா, பிரான்சிஸ்கம்மா, அரியற் ஆகியோரின் பாசமிகு மருமகனும், சிறில், தேவராசா, விசியன், சந்திரன், இந்திரன், ஜெயரட்ணம் ஆகியோரின் அன்பு மருமகனும், றோசுமலர், தங்கபர்ணம், சுசிலா, வனிதா, விசியா, றோசுக்கிளி ஆகியோரின் பாசமிகு பெறாமகனும், குட்டி, சுயாத்தா, வினிஸ்ரலா, யுவேந்தினி, ராஜா, காந்தன் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், ரூபஸ், கிறேஸ் மேரிறோச், தர்சினி ஆகியோரின் உடன்பிறவா சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (05.08.2021) வியாழக்கிழமை பிற்பகல் 02 மணியளவில் அவரின் இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு, புனிதமரியன்னை ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டபின் நாவாந்துறை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:** 0773608689
விஜியனிதா, வினிஸ்ரலா, யுவேந்தினி

தகவல்:
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

மலர்வு 25 - 07 - 1933



உதிர்வு 03 - 08 - 2021

### திருமதி நேசரெத்தினம் தம்பிராசா

(எருவில் கிழக்கு- பாரதிபுரம்)

எருவில் கிழக்கு பாரதிபுரத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் திருமதி நேசரெத்தினம் தம்பிராசா 03.08.2021 செவ்வாய்க்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை – சங்குவதிப்பிள்ளை தம்பதியரின் அன்புமகளும், காலஞ்சென்ற தம்பிராசாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பாலிப்போடி – செம்பகணாச்சி ஆகியோரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற சந்திரசேகரம், சீதாலெட்சுமியின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான செல்லம்மா, சின்னத்தம்பி, கனகரெத்தினம், இராசதுரை, இளையதம்பி, தெய்வானை, குணநாயகி மற்றும் குமாரப்போடி, பொன்னம்மா, சௌந்தரி, பூபதி, சீவரெத்தினம், காந்தமலர் ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்றவர்களான தம்பிராசா, ஏகாம்பரம், மைலிப்போடி, ஆறுமுகம்,யோகராஜா மற்றும் செல்வராசா, வையாளிப்போடி ஆகியோரின் உடன்பிறவா சகோதரியும், விக்னேஸ்வரன், விக்னேஸ்வரி, நீலவேணி, மகேஸ்வரன் காலஞ்சென்ற தில்லேஸ்வரன்,செந்தூர் (London), பத்மினிதேவி, கயிலைநேசன், கதிர்காமவேல் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற இராசநாயகம் மற்றும் இராசநாயகி, வேதநாயகி, அன்னலெட்சுமிஆகியோரின் அன்புப் பெரியம்மாவும், செல்வநாயகம், கிருபையம்மா, ஜயாத்துரை, புஸ்பவதி, அருணா (London), ஈஸ்வரன், உசாநந்தினி, சுகிதாசினி, மகேந்திரன், உதயகுமார், பேரின்பராசாஆகியோரின் அன்புமாமியாரும், ஜீவராணி (ஆசிரியர் – வம்மிவட்டுவான், வாகரை) தவேந்திரன் (தாதியஉத்தியோகத்தர் – களுவாஞ்சிகுடி), தேவரூபன் (விவசாய தொழில் நுட்பஉத்தியோகத்தர்), நிமல்ராஜ், குணராஜ், ஜதுஸ்ராஜ், ரூபகாந்தன், துயந்தன், கிருஸ்ரின் (மாவட்ட நீதிமன்றம் – திருகோணமலை), வினேஸ் காந், சிவகுமார்,சுகந்தினி ஆகியோரின் பாசமிகு அம்மம்மாவும், வேதரூபி, துஷாந்தினி, உருத்திராங்கரன், குணாநிதி,தர்சினி, தினேகா, பிரியா, லக்சிகா, ஆஹ்ராஸ் பொருளியலாளர் London), அக்ஷயா (London), அஸ்வினி, டசாந்,சிவசுப்பிரமணியம்,துசாந்தினி,நிதர்சினி (தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்பு அப்பம்மாவும், திவானு, பவிஷாந், ஆதிஷா, ஜஸ்மிகா, வவிசனா, லக்ஷித், லஸ்விந், கரிசினி, அக்ஷாத்,திபிக்ஷா, சஸ்விதா, கிந்துஜன் ஆகியோரின் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (04.08.2021) புதன்கிழமை மாலை 3.00 மணியளவில் எருவில் ஆலையடிச்சோலை பொது மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

## சிவில்...

சிறிதரன்.

வட்டக்கச்சி விவசாய பண்ணையை இராணுவத்தின் கட்டுப்பாட்டிலிருந்து நீக்கி விவசாய திணைக்களத்தின் கீழ் இயங்கும் ஓர் அரச பண்ணையாக மாற்ற வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான வினா நேரத்தில் பிரதமரிடம் வடக்கிலுள்ள விவசாய பண்ணைகள் தொடர்பில் எழுப்பிய கேள்வியின் போதே இவ்வாறு வலியுறுத்திய சிறிதரன் எம்.பி. மேலும் தெரிவிக்கையில்,

"வட்டக்கச்சி விவசாய பண்ணை ஓர் அரச பண்ணையாகும். 1960ஆம் ஆண்டு முதல் அதன் கீழ் ஓர் அரச விவசாய பாடசாலையும் உள்ளது. கிட்டத்தட்ட 600 பேர்வரை பணியாற்றிய ஒரு விவசாய பண்ணையாகும். இந்தப் பண்ணையை மீள இயக்குமாறு பல தடவைகள் அரசிடம் கோரியிருந்தோம். அமைச்சர் மஹிந்தானந்தவும் விரைவில் இப்பண்ணையை அரச பண்ணையாக இயங்க வைப்போம் எனக் கூறியிருந்தார். ஆனால், இந்தப் பண்ணையானது இன்னமும் இராணுவத்தின் சிவில் பாதுகாப்புப் பிரிவின் கீழ்தான் இயங்கி வருகின்றது. குண்டசாலை மற்றும் திருநெல்வேலி விவசாயப் பண்ணைகளைப் போன்று இதனையும் இயக்க வேண்டும். ஆகவே, இது எப்போது அரச பண்ணையாக இயங்கும் ?

அத்துடன் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்டங்களில் உள்ள விவசாயப் பண்ணைகளை சிவில் பாதுகாப்பு படையினரே பேணி வருகின்றது. இப்பண்ணைகள் எப்போது வடக்கு மாகாண சபையிடம் ஒப்படைக்கப்படும்? அப்படி ஒப்படைக்க முடியாதெனில் அதற்குரிய காரணம் என்ன?" - என்று கேள்வி எழுப்பினார். (இ)

## வடக்கில் விவசாய...

மக்களுக்கு வழங்குவதே இதன் பிரதான நோக்கம் எனக் கூறினார்.

சிறிதரன் எம்.பியின் கேள்விக்கு பதிலளித்த அமைச்சர், மன்னாரில் வெள்ளாம் குளம் பிரதேசத்தில் உள்ள 100 ஏக்கர் நிலப்பரப்பில் இலங்கை இராணுவம் விவசாய பண்ணைகளை நடத்தி வருவதாக கூறினார்.

மேலும் புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட்ட புலிகளின் முன்னாள் உறுப்பினர்களுக்கு வேலை வாய்ப்புகளை வழங்குவதே இதன் நோக்கம் என்றார்.

## மாகாணங்களு...

அனுப்பப்படுவார் கள் என்று பொலிஸ் ஊடக பேச்சாளர் சிரேஸ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இவ்வாறு கடந்த தினங்களில் மாகாண எல்லையை கடந்து செல்ல முற்பட்ட பலர் திருப்பி அனுப்பப்பட்டதாகவும் அவர் கூறினார். மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்து அரச பணியாளர்களுக்கு மாத்திரமே திறக்கப்பட்டுள்ளது.

அத்துடன் நெருங்கிய உறவினர்களின் மரணச் சடங்குகளில் கலந்து கொள்வதற்காக செல்பவர்களும் அனுமதிக்கப்படுவார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ஜனாதிபதி...

இதன்போது ஜனாதிபதி செயலகத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 42 பேர் கைதுசெய் யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்களில் 26 ஆண்களும் 16 பெண்களும் அடங்குகின்றனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இதன்போது, ஜனாதிபதி செயலகத்துக்கான வீதியைக் குறுக்கிட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களின் 10 வாகனங்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் கூறியுள்ளார். (இ)

## கொரோனா...

தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, கொரோனா தொற்றாளர்களின் அதிகரிப்பால் இரத்தினபுரி மாவட்ட வைத்தியசாலையும் நேற்று முன்தினம் அவசர நிலையை அறிவித்தது.

அவசர நிலையை அறிவித்துள்ள வைத்தியசாலைகளில் அவசர சிகிச்சைப் பிரிவுகள் மற்றும் விடுதிகள் நிரம்பியுள்ளதால் அங்கு மேலதிக படுக்கை வசதிகளை ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இதேவேளை, தற்போது, நாடளாவிய ரீதியில் உள்ள வைத்தியசாலைகளில் உள்ள கொவிட் சிகிச்சை மையங்கள் 90வீதத்துக்கு மேல் நிரம்பியுள்ளன.

மேல் மாகாணத்தில் அனைத்து சிகிச்சைப் பிரிவுகளும் 100 வீதம் நோயாளிகளால் நிரம்பியுள்ளன. பல வைத்தியசாலைகளில் கோவிட் நோயாளிகளுக்குபடுக்கைகள் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, அதிகளவில் சிறுவர்கள் கோவிட் 19 தொற்றுக்குள்ளாகி பாதிக்கப்பட்டு வருவதால் லேடி ரிட்ஜ்வே வைத்தியசாலையில் படுக்கைத் திறனுக்கும் இரு மடங்கு அதிகமான சிறுவர்கள் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனரென தெரியவருகிறது.

## வடக்கில்...

பட்டுள்ளனர்.

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடத்தில் நேற்று வடக்கில் 71 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதில், 2 வயது குழந்தை முதல் 22 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதேபோன்று யாழ். போதனா மருத்துவமனையின் ஆய்வுகூடத்தில் 4 சிறுவர்களுக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது.

அளவெட்டி பிரதேச மருத்துவமனையில் 6 வயது இரட்டை சிறுமிகள் மற்றும் 6, 8, 13 வயது சிறுமிகள், 14 வயது சிறுவன் என 6 சிறுவர்கள் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர்.

காரைநகர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 3, 14 வயது சிறுவர்கள் இருவர், 5, 11 வயது சிறுமிகள் இருவர் என நான்கு சிறுவர்கள் தொற்றாளராக இனங்காணப்பட்டனர்.

பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் 3 வயது பெண் குழந்தையும், யாழ். போதனா வைத்தியசாலையில் 14 வயது சிறுவனும் தொற்றாளர்களாக உறுதிப்படுத்தப்பட்டனர்.

வவுனியாவில் மருத்துவ அதிகாரி பிரிவில் 02, 06, 07, 10, 10, 12, 11, 14 18 வயது சிறுவர்களும், 6, 12, 18 வயது சிறுமிகளும் அடங்கலாக 12 சிறுவர்கள் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர்.

தவிர, மன்னார் பொது மருத்துவமனையில் 10 வயது சிறுவனும், கிளிநொச்சி பொது மருத்துவமனையில் 15 வயது சிறுவனும் தொற்றாளர்களாக உறுதிப்படுத்தப்பட்டனர். (அ-ஐ)

## நல்லூர்...

அதிபர் க. மகேசன் அறிவித்துள்ளார்.

நேற்றைய தினம் அவர் நடத்திய ஊடக சந்திப்பிலேயே இதனைக் கூறினார்.

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் பெருந்திருவிழா எதிர்வரும் 13ஆம் திகதி கொடியேற்றதுடன் ஆரம்பமாகின்றது. இந்தப் பெருந்திருவிழாவில் பங்கேற்க சுகாதார வழிகாட்டுதல்களின்படி 100 பேருக்கு மாத்திரமே அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

எனவே, ஆலயத்தின் உட்பிரகாரத்தில் மாத்திரம் திருவிழா நடத்துவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. எனவே, இந்த வருட ஆலய உற்சவத்தினை திறம்பட செயற் படுத்துவதற்கு அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைக்க வேண்டும் - என்றார். (ஐ-3)

## சம்பள...

வரவு - செலவுத் திட்டத்தின் ஊடாக தீர்வு காணப்படும்."

- இவ்வாறு கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நிலையியல் கட்டளை 27/2இன் கீழ் ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டு பிரச்னைகள் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்த அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், மேலும் கூறுகையில்,

"ஆசிரியர்களின் சம்பள முரண்பாடு தொடர்பான பிரச்னையை நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம். கொள்கை ரீதியில் ஆசிரியர்களுக்கு இதனை விடவும் சம்பளத்தை வழங்க வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே இருக்கின்றோம். ஆசிரியர்களுக்கு மட்டும் தீர்வு வழங்கப்பட்டால் அதற்கு சமாந்திரமான மற்றைய அரச சேவையாளர்களுக்கு பாதிப்பு ஏற்படும். எனவே, அரச சேவையாளர்கள் அனைவருக்குமான முறைமையொன்றை அரசு தயாரிக்கும்.இதற்கு பொருத்தமான முறைமை வரவு - செலவுத் திட்டமே. இதன்படி அதற்கான திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. நவம்பரில் முன்வைக்கப்படும் வரவு - செலவுத் திட்டத்தில் இது உள்ளடக்கப்படும். இதில் அனைத்து அரச துறையினர் தொடர்பாகவும் குறிப்பிடப்படும்" - என்றார். (இ)

## நாட்டில்...

நிபுணர்கள் பலர் அழைக்கப்பட்டுள்ளனர். இங்கு கிடைக்கப்பெறும் ஆலோசனைகள், தகவல்களை அடிப்படையாக கொண்டு புதிய சுகாதார கட்டுப்பாடுகளை விதிக்க அரசு உத்தேசித்துள்ளது.

முதற்கட்டமாக, திருமண நிகழ்வுகள், வைபவங்கள் மற்றும் கூட்டங்களைத் தற்காலிகமாக இடைநிறுத்துவது குறித்து ஆலோசிக்கப்படுமென தெரிகிறது.

நாட்டின் அனைத்து வைத்தியசாலைகளும் கொரோனா நோயாளர்களால் நிரம்பியுள்ளதால் தொற்றுப் பரவலை கட்டுப்படுத்த அரசு விரைந்து முடிவுகளை எடுக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளதாக அமைச்சர் ஒருவர் தெரிவித்தார். (அ)

## வடக்கில் நேற்று...

தகவலின் அடிப்படையிலேயே இந்த விவரம் வெளியானது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் ஆய்வுகூடத்தில் 605 பேரின் மாதிரிகள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதில், 59 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இதன்படி, யாழ். போதனா மருத்துவமனையில் 20 பேர், பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் 7 பேர், கோப்பாய் பிரதேச மருத்துவமனையில் 6 பேர் சண்டிலிப்பாய் மருத்துவ அதிகாரி பிரிவில் 3 பேர் சங்கானை பிரதேச மருத்துவமனையில் ஒருவர், சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் ஒருவர், வேலணை மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவர், யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் ஒருவர் என 38 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர்.

கிளிநொச்சி பொது மருத்துவமனையில் 6 பேரும், அக்கராயன் பிரதேச மருத்துவமனை, தருமபுரம் பிரதேச மருத்துவமனையில் தலா ஒருவர் என்று 8 பேர் கிளிநொச்சி மாவட்டத்தில் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டனர்.

மன்னார் பொது மருத்துவமனையில் 8 பேர் தொற்றாளர்களாக உறுதிப்படுத்தப்பட்டனர். இதேபோன்று முல்லைத்தீவு பொது மருத்துவமனையில் ஒருவர், புதுக்குடியிருப்பு பிரதேச மருத்துவமனையில் ஒருவர் என முல்லைத்தீவு மாவட்டத்தில் இருவர் தொற்றாளர்களாக உறுதிப்படுத்தப்பட்டனர்.

இதேவேளை, யாழ். பல்கலைக்கழக ஆய்வுகூடத்தில் 266 பேரின் மாதிரிகள் பி. சி. ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதில் 71 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர்.

இதன்படி, காரைநகர் மருத்துவ அதிகாரி பிரிவில் 12 பேருக்கும், அளவெட்டி பிரதேச மருத்துவமனையில் 12 பேருக்கும், யாழ்ப்பாணம் மாநகர மருத்துவ அதிகாரி பிரிவில் 11 பேருக்கும், வேலணை மருத்துவ அதிகாரி பிரிவில் 5 பேருக்கும், சாவகச்சேரி 5 பேருக்கும் என யாழ்ப்பாண மாவட்டத்தில் 46 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

வவுனியா சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 22 பேருக்கும், வவுனியா சிறையிலுள்ள 3 பேருக்கும் கொரோனா தொற்று இனங்காணப்பட்டது. (ஐ)

## மேலும் 82...

மொத்த எண்ணிக்கை 4,727 ஆக உயர்ந்துள்ளது.

இதேவேளை நேற்று மாத்திரம் நாட்டில் 2543 பேர் கொரோனாத் தொற்றாளிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளனரென இராணுவ தளபதி அறிவித்துள்ளார்.

## பயணம்...

தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்கள். இந்த நிலையில் மிகவும் அவதானமாக நடந்து கொள்ள வேண்டும்.

**ஆலயத்தில் 100 பேருக்கே அனுமதி!**

ஆலய வழிபாடுகள் ஊடாக மக்கள் ஒன்றுசேர்வது அவதானிக்கப்பட்டுள்ளது. எனவே, மக்கள் சுகாதார கட்டுப்பாடுகளை மதித்து தங்கள் குடும்பத்தை பாதுகாத்துக் கொள்ள வேண்டும். இதேபோல் ஆலய நிர்வாகிகளும் சுகாதார நடைமுறைகள் பின்பற்றபடுவதை உறுதிப்படுத்த வேண்டும். தற்போதைய நிலைமையில் 100 பேருக்கு குறைவானவர்களின் பங்கு பற்றுதலோடு உள்வீதி வலம் வர மாத்திரமே ஆலயங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதனை மதித்து நடந்துகொள்ள வேண்டும்.

**தடுப்பூசி கட்டாயம்!**

யாழ். மாவட்டத்தில் தடுப்பூசி வழங்கும் நடவடிக்கை திறமையாக செயல்படுத்தப்படுகின்றது. தடுப்பூசியின் முதல் டோஸ் வழங்கும் நடவடிக்கை எதிர்வரும் 7ஆம் திகதி வரை தொடர்ந்து நடக்கவுள்ளது.

30 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் தடுப்பூசியை பெறுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. அது தேவையான ஒன்று இது சட்டத்தால் நடைமுறைப்படுத்தப்படாவிட்டாலும் சமூகத்தின் பாதுகாப்பு கருதி அது கட்டாய தேவையாகக் கருதப்படுகிறது. எனவே, அனைவரும் தடுப்பூசியை பெற்று அதற்கு அடையாளமாக, அட்டையைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

**இரண்டாவது டோஸ் 9ஆம் திகதி!**

மேலும் எதிர்வரும் 9ஆம் திகதி 10 ஆம் திகதிகளில் இரண்டாவது டோஸ் தடுப்பூசி வழங்கப்படவுள்ளது. முதல் கட்டமாக தடுப்பூசியின் முதல் டோஸ் பெற்றவர்களுக்கான இரண்டாவது டோஸ் வழங்கப்படவுள்ளது. எனவே, முதலாவது டோஸ் பெற்றவர்கள் தமக்குரிய இரண்டாவது டோஸை அந்தந்த தடுப்பூசி நிலையங்களுக்கு சென்று பெற முடியும்.

**வீடுகளுக்கு சென்று தடுப்பூசி**

வயது முதிர்ந்த, நடமாட முடியாது வீடுகளில் தங்கியிருப்பவர்களுக்கு அவர்களின் வீடுகளுக்கு சென்று தடுப் பூசி வழங்குவதற்கான ஏற்பாடுகள் சுகா தாரப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறு இருப்பவர்கள் தங்களின் விவரங்களை அந்தந்தப் பிரதேச செயலர் மற்றும் பொது மருத்துவ அதிகாரிகளுக்கு அறிவிப்பதன் மூலம் தங்களுக்குரிய தடுப்பூசியைப் பெற முடியும்.

**டெல்டா பரவும் சாத்தியம்!**

யாழ். மாவட்டத்தில் டெல்டா திரிபு வைரஸ் பரவக்கூடிய சாத்தியக்கூறு காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. எனவே பொதுமக்கள் மாவட்டத்தில் இந்தத் தொற்றைப் பரவாது தடுக்க ஒத்துழைக்க வேண்டும் - என்றார். (ஐ-3)

ஈழநாடு
Eelanadu

# நீதிபதிகளின் எண்ணிக்கையை 218ஆக உயர்த்துவதற்கு ஆராய்வு

## வடக்கு, கிழக்கில் காணி மத்தியஸ்த சபைகள்

கொழும்பு, ஓக.05

**நீதிமன்றக் கட்டமைப்பில் தற்போது காணப்படும் நெருக்கடிகளைக் குறைத்து விரைவில் வழக்குகளை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு மூன்று வருட விசேட திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கின்றது என நீதி அமைச்சர் அலி சப்ரி நீதி அமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் தெரிவித்தார்.**

மேல் மாகாணத்தில் புதிய நீதி மன்றத்தை அமைப்பதற்கும் தற் போது காணப்படும் நீதிமன்றங்க ளின் அடிப்படை வசதிகளை அபி விருத்தி செய்வது தொடர்பான மூன்று வருட விசேட திட்டம் தொடர்பில் கலந்துரையாடுவதற் குமாக ஏற்பாடு செய்யப்பட்ட இந்தக் கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர்களான லொஹான் ரத் வத்த, சுசில் பிரேமஜயந்த, பியல் நிஷாந்த மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களான பேராசிரியர் திஸ்ஸ விதாரண, சாஹர காரிய வசம், ஜனாதிபதி சட்டத்தரணி ஜயந்தவீரசிங்ஹ, மர்ஜான் பளீல், சந்திம வீரக்கொடி மற்றும் கோகிலா குணவர்த்தன ஆகியோர் கலந்து கொண்டனர்.

உலகில் அபிவிருத்தியடைந்த நாடுகளின் சனத்தொகையில் பத்து இலட்சம் பேருக்கு 200 இற்கும் அதி கமான நீதிபதிகள் காணப்படுகின் றனர் எனவும், இலங்கையில் இந்த எண்ணிக்கை 15 ஆகக் காணப்படு கின்றது எனவும் நீதி அமைச்சர் சுட்டிக்காட்டினார். இதற்கமைய நீதிபதிகளின் எண்ணிக்கையை 218 ஆக உயர்த்துவதற்கும், நீதிமன்றங்க ளின் எண்ணிக்கையை 245 ஆக அதிகரிப்பதற்கும் எதிர்பார்ப்பதா கவும் அவர் தெரிவித்தார். அத்து டன், நீதிபதிகளுக்கு அவசியமான அடிப்படை வசதிகளை அபிவி ருத்தி செய்வதற்கும், இதனை எதிர் வரும் இரண்டு வருடங்களில் ஏற் படுத்திக் கொடுப்பதற்கும் நடவ டிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, மத்தியஸ்த சபையை பலப்படுத்தவும், இவற்றின் ஊடாக தீர்க்கப்படும் பிரச்சினை களின் எண்ணிக்கையை அடுத்த வருடத்தில் இரண்டு மடங்காக அதிகரிப்பதற்கும் எதிர்பார்க்கப் படுகின்றது.

அத்துடன் காணிப் பிணக்கு களைத் தீர்ப்பதற்கான காணி மத்தியஸ்த சபையை யாழ்ப்பாணம், அநுராதபுரம், திருகோணமலை, மட்டக்களப்பு, கிளிநொச்சி உள் ளிட்ட பிரதேசங்களில் அமைப்ப தற்கும் நடவடிக்கை எடுக்கப்பட் டிருப்பதாகவும் இந்தக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

நீதி அமைச்சின் செயலாளர் எம். பி.கே.மாயாதுண்ண உள்ளிட்ட அரச அதிகாரிகள் பலரும் இந்தக் கூட் டத்தில் கலந்துகொண்டனர். (இ)

# வீட்டில் திடீரென மணடமடைந்த தம்பதியினருக்கு கொரோனா

கொழும்பு, ஓக.05

காலி மாவட்டம், நாகொட பிரதேசத்திலுள்ள வீடொன்றில் திடீரென உயிரிழந்த தம்பதியர் கொரோனா வைரஸ் தொற்றினாலேயே உயிரிழந்துள் ளனர் என்று கராப்பிட்டிய போதனா வைத்தியசாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

நாகொடையைச் சேர்ந்த 73 வயது நபரும், அவரது 72 வயது மனைவியுமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

குறித்த வயோதிபர் கடந்த 2ஆம் திகதி வீட்டில் மரண மடைந்த நிலையில் அவரது சடலம் கராப்பிட்டிய வைத் தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டு மேற்கொள்ளப் பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் அவர் கொரோனாத் தொற்றால் மரணமடைந்தமை தெரியவந்துள்ளது.

அதேபோன்று அவரது மனைவி நேற்றுமுன்தினம் அவரது வீட்டில் மரணமடைந்த நிலையில், அவ ரது சடலமும் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபோது அவரும் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தமை தெரிய வந்துள்ளது.

குறித்த இருவரது சடலங்களும் தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளுக்கு அமைவாகத் தகனம் செய்யப்பட் டுள்ளன. (இ)

# கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் 380 ஆசிரியர்களின் கற்கைநெறி பூர்த்தி!

யாழ்ப்பாணம், ஓக. 05

நாடு முழுவதிலும் உள்ள ஆசிரியர் கலாசாலைகளில் 2019 - 2020 கற்கை ஆண்டில் கல்வியைத் தொடரும் ஆசிரியர் பயிலுநர்களுக்கான கற்கைநெறி எதிர்வரும் செப்ரெம்பர் 8ஆம் திகதியுடன் நிறைவுக்கு வரவுள்ளது. இதன்படி கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் இருந்து 380 ஆசிரிய மாணவர்கள் கற்கையை பூர்த்தி செய்து வெளியேறவுள்ளனர் என்று கலாசாலை அதிபர் வீ. கருணலிங்கம் தெரிவித்தார்.

இவர்களுக்காக பரீட்சைத் திணைக்களம் நடத்தும் பரீட்சைகள் செப்ரெம்பர் மாத நடுப்பகுதியிலும் தேசிய கல்வி நிறுவகம் நடத்தும் பரீட்சைகள் ஒக்டோபர் மாத முற்பகுதியிலும் நடைபெற ஏற்பாடாகி வருவதாகவும் தெரியவருகின்றது.

2018 - 2019 கல்வியாண்டுக்குரிய பரீட்சை நடைபெறுவதற்குரிய ஏற்பாடுகள் இருந்த நிலையில் கோவிட் நிலைமை காரணமாக அந்தப் பரீட்சை ஒத்திவைக்கப்பட்டிருந்தது. அந்தப் பரீட்சையும் 2019 - 2020 அணியினருடன் செப்ரெம்பர் மாதத்தில் நடைபெறவுள்ளது. இரண்டு கல்வியாண்டுகளுக்குரிய சான்றிதழ்கள் செல்லுபடியாகும் காலம் வேறுபட்டதாக - கற்கை நெறி பூர்த்தியடைந்த காலப்பகுதியை அடிப்படையாகக் கொண்டு அமையவுள்ளது.

இதேவேளை 2021 கல்வியாண்டுக்கான ஆசிரியர் கலாசாலைகளுக்கான அனுமதி தொடர்பான நேர்முகப் பரீட்சைகள் இந்த மாத இறுதியில் நடைபெறவுள்ளன. இவர்களுக்கான கற்கை நெறிகள் செப்ரெம்பரில் ஆரம்பிக்கப்பட வாய்ப்பு உள்ளதாகவும் அதிபர் மேலும் தெரிவித்தார். (ஐ)

# மக்கள் சொந்த மாவட்டத்திலேயே வாக்களிக்கும் உரிமை வேண்டும்

## சபையில் காதர் மஸ்தான் எம்.பி. கோரிக்கை

கொழும்பு, ஓக. 05

"வடக்கு மாகாணத்திலிருந்து 1990 ஆம் ஆண்டு வெளியேற்றப் பட்ட மக்களின் வாக்குரிமையை பாதிக்கும் வகையில் தேர்தல் ஆணைக்குழு பதிவுகளை மேற் கொண்டுள்ளது. எனவே, இவர்க ளுக்கு தமது சொந்த மாவட்டத்தில் வாக்களிக்கும் உரிமையை வழங்க வேண்டும்."

- இவ்வாறு ஆளும் கட்சியின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் கோரிக்கை விடுத்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற தேசிய வேலையாட் களின் ஆகக்குறைந்த சம்பள சட்டத் திருத்தம் மீதான விவாதத்தில் உரை யாற்றும்போதே மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்த அவர், மேலும் கூறுகையில்,

"சிறுவர் துஷ் பிரயோகங்களுக்கு எதிராக அரசு கடுமையான நடவடிக்கைகளை எதிர்காலத்தில் எடுக்கவுள்ளது. சிறுவர் உழைப்பை மட்டுப்படுத் தும் நோக்கில் பல தீர்மானங்களை



எடுத்துள்ளோம். ஏனைய நாடுக ளுடன் ஒப்பிடுகையில் எமது நாட் டில் தடுப்பூசித் திட்டம் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் 68 சதவீத மானவர்களுக்கு முதலாம் கட்ட தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி, பிரதமர் தலைமையில் இந்த அரசு கொரோனாத் தொற்றை கட்டுப்படுத்தும் பணியை வெற்றி கரமாக முன்னெடுத்துள்ளது.

வடபகுதியில் இருந்து 1990ஆம் ஆண்டு பாரிய அளவான மக்கள் வெளியேற்றப்பட்டனர். அவர்கள் தமது சொந்த இடங்களில் வாக்க ளிக்க வேண்டும் எனக் கோரியும் தற்போது தற்காலிகமாக தங்கி யுள்ள இடங்களிலேயே அவர்கள் பதியப்பட்டுள்ளனர்.

மன்னாரில் மாத்திரம் 7 ஆயி ரத்து 500 பேரின் வாக்குகள் இவ் வாறு பாதிக்கப்பட்டுள்ளன. தேர்தல் ஆணையகத்தின் இந்த நடவடிக்கையானது அவர்களது உரிமையைப் பாதிக்கும் வகையில் அமைந்துள்ளது. வெளியேற்றப் பட்ட மக்களில் 70 சதவீதமான மக்கள்தான் மீள்குடியமர்த்தப்பட் டுள்ளனர்.

மீள்குடியேற்றம் செய்ய வாக் காளர் இடாப்பில் உள்ள தகவல்கள் தான் பார்க்கப்படுகின்றன. இத னால் மீள் குடியமர்த்தப்படாத மக்களுக்கு பெரும் அநீதி இழைக் கப்பட்டுள்ளது. ஆகவே, 1990ஆம் ஆண்டு வெளியேற்றப்பட்ட மக் களை அவர்கள் விரும்பும் அவர் களது சொந்த இடத்தில் மீள்குடிய மர்த்த நடவடிக்கையெடுக்கப்பட வேண்டும் என்பதுடன் அவர்களின் வாக்குரிமை சொந்த இடத்தில் பயன்படுத்துவதற்கான பதிவையும் தேர்தல் ஆணைக்குழு உறுதிப் படுத்த வேண்டும்" - என்றார். (இ)

# வயோதிபர் இல்லத்தில் 26 பேருக்கு கொரோனா

பிலியந்தலை, ஓக. 05

பிலியந்தலையிலுள்ள வயோதிபர் இல்லத்தில் வயோ திபர்கள் உள்ளடங் களாக 26 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிபடுத்தப்பட்டுள் ளது எனப் பிலியந்தலை பொதுச் சுகா தார வைத்திய அதிகாரி இந்திக்க எல்லாவல தெரிவித்துள்ளார்.

குறித்த இல்லத்தில் 20 வயோதிபர் களுக்கும், நிர்வா கக் குழுவைச் சேர்ந்த 6 பேருக்குமே கொரோனாத் தொற்று உறுதிப் படுத்தப்பட்டுள்ளது.

வைத்தியசாலைகளில் நிலவும் இட நெருக்கடியைக் கருத்தில்கொண்டு தொற்றாளர்கள் அனைவரும் வயோ திபர் இல்லத்திலேயே தனிமைப்படுத் தப்பட்டுள்ளனர்.

அவர்களுக்குத் தேவையான வைத்திய வசதிகள் உள்ளிட்ட அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. (இ)

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை
வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை துறையில்
25 வருடங்களைக் கடந்து
ஆகாய, கடல், மார்க்கமாக
அதிவிரைவு, பாதுகாப்பு,
நம்பகத்தன்மையுடன்
பயணத் தடை அமுலில் உள்ள நேரத்திலும் எமது சேவைகளை பெற்றுக்கொள்ள முடியும்
அருள் குளோபல் எக்ஸ்பிரஸ்
அருள்ஸ் (பிறைவேற்) லிமிடட்
இல.01.பிறவுண் வீதி, நாவலர் வீதிச் சந்தி, யாழ்ப்பாணம். தொ.பே. 076 443 1577
இல.10, புதிய மாநகர சபை கட்டிடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 076 443 1577

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 05.08.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

வியாழன்

**காலை**

6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.05 மணி : உளவியல் கருத்து
வழங்குபவர் உளவள துனையாளர் திரு.நா.நவராஜ்
7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் : பண்டிதர் திருநாவுக்கரசு



7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : பாரதீ (மறு ஒளிபரப்பு)
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை

**பகல்**

1.00 மணி : நலம்தானா-மறுஒளிபரப்பு
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-ஐ.சிந்துபாத்
திரைப்படங்களிலிருந்து காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களுக்கான நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : வெள்ளித்திரை - வெள்ளை யானை



**இரவு**

7.00 மணி : சமையல் சமையல்
7.30 மணி : வெள்ளிடை நுட்பம்-தொழில்நுட்பம் பயன்பாடுபற்றிய நிகழ்ச்சி-இந்த வாரம் ரோன் கமராக்கள்



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : மாதம் ஒரு இசைக்குழு
10.00 மணி : நேருக்கு நேர்-அரசியல் நிகழ்ச்சி

## DAN COMEDY HD

**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன்
சந்தானம் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**

8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**

12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**

8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**

5.15 மணி - தரம் 06 தமிழ்
6.00 மணி - தரம் 07 விஞ்ஞானம்
6.45 மணி - தரம் 08 கணிதம்
7.30 மணி - தரம் 09 வரலாறு
8.15 மணி - தரம் 10 விஞ்ஞானம்
9.00 மணி - க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) தமிழ்
10.00 மணி - பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி - க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப்பிரிவு) கணிதம்
12.00 மணி - தரம் 06 தமிழ்

**பகல்**

1.00 மணி - தரம் 07 விஞ்ஞானம்
2.00 மணி - தரம் 08 கணிதம்
3.00 மணி - க.பொ.த சாதாரண தரம் விவசாயம்
3.40 மணி - க.பொ.த சாதாரண தரம் கத்தோலிக்கம்
4.20 மணி - க.பொ.த சாதாரண தரம் ஆங்கிலம்
5.00 மணி - க.பொ.த சாதாரண தரம் கணிதம்
5.40 மணி - க.பொ.த சாதாரண தரம் தகவல் தொழில்நுட்பம்
6.20 மணி - க.பொ.த சாதாரண மாதிரி வினாத்தாள்
7.00 மணி - க.பொ.த சாதாரண மாதிரி வினாத்தாள்

## ஓ ரிவி

**காலை**

5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**

12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**

7.00 மணி :செய்திகள்
7.30 மணி : அருளுரை

## CHANNEL HOLY MARY

**காலை**

7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபமாலை

**பகல்**

12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்சிந்தனை
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)

## Pirai Television

**காலை**

6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரீஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்
12.00 மணி : லுகர் அதான்

**பகல்**

12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்
7.00 மணி : பிறை பிரசங்கம்

**இரவு**

8.00 மணி : இஸ்லாமிய வரலாறு
8.30 மணி : மனதோடு பேசலாம்